இதழ் 352
16 ஆகஸ்ட் 2025
18 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

## செஞ்சோலைப் படுகொலையின் 19ஆவது நிறைவாண்டின் நினைவாக








# இரகசியத்தன்மை 'அரசியல் சிதைவின்' ஆரம்பம்

விதுரன்



## அலாஸ்கா பேச்சும் – ஐரோப்பாவின் எதிர்காலத்தை மாற்றப்போகும் போரும்

வேல்ஸில் இருந்து அருஸ்


© 2025 இலக்கு இணையம்

## இளம் சிங்கள ஊடகவியலாளர்களால் “செம்மணி” நூல் வெளியீடு



இளம் ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவர கெதர மற்றும் எம்.எஃப். எம்.பஸீர் ஆகியோர் இணைந்து எழுதிய ‘செம்மணி’ எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆகஸ்ட் 2025 அன்று நூலின் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய தரிந்து ஜயவர்தன கூறியதாவது:

‘வடக்கின் உண்மை தெற்குக்குச் சொல்லப்படாமலும், தெற்கின் உண்மை வடக்குக்குச் சொல்லப்படாமலும் இருந்த வரலாற்றைக் கடந்து, உண்மையை உண்மையாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப நாம் பங்களிக்க வேண்டும்’.

## உதவிப்பொருட்களை ஆயுதங்களாக்குதல் - நூற்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் கண்டனம்



பொதுமக்களின் உயிர்களைக் காக்கும் உதவிப் பொருட்களை காசாவிற்கு அனுப்புவதை இஸ்ரேல் தடுத்து வருவதற்கு எதிராக நூறுக்கும் மேற்பட்ட உதவி அமைப்புகள் தங்களது எதிர்ப்புக்களைத் தெரி வித்துள்ளன.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகளால் எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளில் உள்ள உதவிப்பொருட்களின் களஞ்சியங்களில் பெருமளவான நிவாரணப் பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் பாலஸ்தீனிய மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை இஸ்ரேல் முற்று கையிட்டுள்ள நிலையில், காசாவின் எல்லைகளில் உதவி லாரிகள் குவிந்துள்ளன. மேலும் உணவு, மருந்து, தண்ணீர் மற்றும் தற்காலிக தங்குமிடங்கள் நுழைவதைத் தடுக்க இஸ்ரேல் புதிய விதிகளைப் பயன்படுத்தி வருகிறது என்று

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஊடகவியலாளர் குமணன் மீதான துன்புறுத்தல்களை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

தமிழ் ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணன் மீதான துன்புறுத்தல்களை இலங்கை அரசாங்கம் உடனடி யாக நிறுத்த வேண்டும் என பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும், இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தை (Accountability Project) புதுப்பிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையையும் (UNHRC) கோரியுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் தமிழர்களுக்கு எதிரான உரிமை மீறல்களை ஆவணப்படுத்தும் இவரை, விசாரணைக்கு அழைத்ததற்கான காரணத்தை இலங்கை அதிகாரிகள் தெரிவிக்காவிட்டாலும், அவரது சமூக ஊடகப் பதிவுகள் தொடர்பாகவே இந்த விசாரணை நடைபெறுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி (mass grave) தொடர்பான அவரது செய்தி வெளியீட்டிற்காக பழிவாங்கும் நோக்கிலேயே இந்த விசாரணை நடத்தப்படுகிறது என நம்பப்படுகிறது.

குமணன் முல்லைத்தீவு பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவராகவும், மனித உரிமைகள் பாதுகாவலராகவும் இருந்தவர். நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரால் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் உரிமை மீறல்களை அவர் தொடர்ந்து ஆவணப்படுத்தி வந்துள்ளார்.



ஆகஸ்ட் 17, 2025 அன்று குற்றவியல் புலனாய்வுத் துறை (CID) விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு அழைப்பாணை அனுப்பியது. அவரது சமூக ஊடகப் பதிவுகள் குறித்து தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டபோதிலும், காவல்துறை அதிகாரிகள் இந்த விசாரணைக்கான காரணத்தை அதிகாரப்பூர்வமாக விளக்கவில்லை.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ட்ரம்பின் நடவடிக்கையால் திணறும் கார் நிறுவனங்கள்

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் வரிக் கொள்கைகளால் அமெரிக்க கார் விற்பனை சரிவைச் சந்திக்க ஆரம்பித்துள்ளது. இது கார் உற்பத்தியாளர்களை கடுமையாக பாதிக்க ஆரம்பித்துள்ளது.


கடந்த மாதம் காக்ஸ் ஆட்டோமோட்டிவ் வெளியிட்ட தரவுகளின்படி, புதிய கார் விற்பனை கடந்த ஜூன் மாதம் 15.6 மில்லியனில் இருந்து 15.3 மில்லியனாக, அதாவது 300,000 கார் விற்பனை குறைந்துள்ளது.



தேவைக்கு மீறிய செலவு மற்றும் விலைகள் உயர்ந்துள்ளன. நுகர்வோர் அந்த அதிக விலைகளுக்கு பணம் செலுத்தும் மன உறுதியைக்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## அமெரிக்க - ரஸ்ய பேச்சுக்குறித்து ஐரோப்பா கவலை



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அலாஸ்காவில் ஒரு “மோசமான ஒப்பந்தம்” செய்து, ராஜதந்திர வெற்றியை அறிவிக்கலாம் என்று ஐரோப்பிய தலைவர்கள்கவலைப்படுகிறார்கள் என தி எகனாமிஸ்ட் என்ற ஊடகம் கடந்த வியாழக்கிழமை (14) தெரிவித்துள்ளது.

உக்ரைனையும் அதன் நட்பு நாடுகளையும் ஒரு மீளமுடியாத நிலைக்கு இந்த உடன்பாடு கொண்டு செல்லக்கூடும். ஜெலென்ஸ்கி மற்றும் ஐரோப்பிய தலைவர்களுடனான ட்ரம்பின் இந்த வாரம் இடம்பெற்ற காணொளி உச்சிமாநாட்டிற்குப் பிறகும், ஜெலென்ஸ்கியால் செயல்படுத்த கடினமாக இருக்கும் ஒரு பிராந்திய பரிமாற்றத்தை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலங்கையில் இடம்பெறும் உரிமை மீறல்கள்: ஐ.நா. வின் கவனத்தை கோரும் சர்வதேச அமைப்புகள்!



இலங்கையில் இடம்பெறும் அனைத்து உரிமை மீறல்கள் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் (UNHRC) பொறி முறைகளும், உறுப்பு நாடுகள் உள்ளிட்ட சர்வதேச சமூகமும் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஊடகவியலாளர் கணபதிப் பிள்ளை குமணன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, 8 சர்வதேச மனித உரிமை மற்றும் ஊடக உரிமை அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, போர் குற்றங்கள் தொடர்பான தகவல்களை வெளிப் படுத்தும்போது, அவற்றை அடக்குவதற்காக இலங்கை யின் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்ந்து தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் இந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையின் (UNHRC) 60வது கூட்டத்தொடரில் பொறுப்புக் கூறல் மற்றும் நீதி (justice)


தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## செயற்கை நுண்ணறிவு கண்டுபிடித்த புதிய மருந்துகள்

மருந்து எதிர்ப்பு கோனோரியா மற்றும் MRSA ஆகியவற்றைக் கொல்லக்கூடிய இரண்டு புதிய சாத்தியமான நுண்ணுயிர் எதிர்ப்பிகளை செயற்கை நுண்ணறிவு கண்டுபிடித்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கடந்த வியாழக்கிழமை (14) தெரிவித்துள்ளனர்.

இந்த மருந்துகள் செயற்கை நுண்ணறிவால் அணுவுக்கு அணுவாக வடிவமைக்கப்பட்டு, ஆய்வக மற்றும் விலங்கு சோதனைகளில் எதிர்ப்பு சக்தியுள்ள தொற்று நோய்க்கிருமிகளை அழித்துள்ளன.

இரண்டு மருந்துகளும்



பரிந்துரைக்கப்படுவதற்கு முன்பு இன்னும் பல ஆண்டுகள் சுத்திகரிப்பு மற்றும் மருத்துவபரி சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

ஆனால், அதன் பின்னணியில் உள்ள

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தமிழர்கள்மீதான இனவழிப்பு தற்போது கட்டமை-க்கப்பட்ட இனவழிப்பாக நீட்சி பெற்றுள்ளது

**நா.உ. ரவிகரன்**

தமிழ்த்தேசிய இனத்தின்மீது பேரினவாத இலங்கை அரசு கடந்த காலங்களில் மேற்கொண்ட இனவழிப்புச் செயல்பாடுகள், தற்போது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயல்பாடுகளாக நீட்சி பெற்றுக் காணப்படுகின்றன என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



முல்லைத்தீவு – வள்ளிபுனம் இடைக்கட்டுச் சந்திப் பகுதியில் 14.08.2025 அன்று இடம்பெற்ற செஞ்சோலை வளாகப் படுகொலை நினைவேந்தலில் பங்கேற்று கருத்துரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சோகமயமான ஒரு தருணத்தில் நாம் அனைவரும் ஒன்றுகூடியிருக்கின்றோம். குறிப்பாக பிள்ளைகளை இழந்த பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் கண்ணீர் சொரிந்து சோகத்தை வெளிப்படுத்தி, கொடூர செஞ்சோலைப் படுகொலை நினைவுகளுடன் இருக்கின்றீர்கள். நாமும் அந்த கொடூர

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ஐநா மனித உரிமையாளரின் அறிக்கை புதிய பானையில் பழையகள்ளு!

**-பா.அரியநேத்திரன்-**

ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் வோல்கடர்க்ன் கடந்த 12.08.2025 அன்று வெளியிட்ட அறிக்கையில் பல விடயங்கள் இருந்தாலும், தமிழினப் படுகொலை இடம்பெற்றது என்றோ அதற்கான சர்வதேச விசாரணை தேவை என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

கடந்த 12 வருடங்களுக்கு முன்பு, 2013 ஆம் ஆண்டு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதன் பிள்ளை அவர்கள் இலங்கைக்கு நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் சான்றுகள் பற்றிய தகவல்கள் வெளியாகின. குறிப்பாக உள்நாட்டு யுத்தத்தின் போது பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் சித்திரவதைகள் போன்ற விடயங்கள் இதில் உள்ளடங்கியிருந்தன என்பதையும், உள்நாட்டு பொறிமுறையை வலியுறுத்தியிருந்ததையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டர்க், வடகிழக்கிலும் குறிப்பாக செம் மணி மனிதப் புதைகுழியையும் கண்டு சென்ற பின்னர் வழங்கிய அறிக்கையும், 12 வருடங்களுக்கு முன்பு வெளியிடப்பட்ட அறிக்கையைப் போலவே உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையை நிறுவ வேண்டும் என்று கோரியது. உள்நாட்டு விசாரணையை ஊக்குவிப்பதோடு சர்வதேச உதவிகளையும் நாடலாம் என்று பரிந்துரைத்தது. அரசுத் தரப்பும் விடுதலைப்புலிகள் அமைப்பும் செய்த துஷ்பிரயோகங்களை, அந்த தரப்புகள் முறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

**ஆசிரியர் தலையங்கம்**

**இலக்கு**

## ஈழத்தமிழர் இறைமை நீக்கத்துக்குச் சிறிலங்காவுக்கு நிதியும் மதியும் விதந்துரைக்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை

"ட்ரம்ப்-பூட்டினின் பொய்களை விழுங்குவதே உக்ரேனுக்குக் குண்டுகளை விட மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைகிறது" என்ற கருத்தைப் பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழான "தி கார்டியன்" இல் அதன் பத்திரிகை எழுத்தாளர் ரபாயேல் பெய்ர் 13/08/2025இல் தனது அரசியல் ஆய்வுக் கட்டுரையில் விளக்கியிருந்தார். அதை வாசித்துக் கொண்டிருந்த நேரத்தில் வெளிவந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்க்கர் டேர்க்கின் சிறீலங்காவின் மனித உரிமைகள் குறித்த அறிக்கை, "தமிழரசுக் கட்சி சிறீலங்காவின் பொய்களை விழுங்குவதே ஈழத் தமிழர்களுக்கு சிறீலங்காவின் இன அழிப்பு என்னும் குண்டை விட மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைகிறது" என்று இலக்கை எழுத வைக்கிறது.

சிறீலங்கா முள்ளிவாய்க்காலில் தேசமாகவே ஈழத் தமிழர்களை இன அழிப்பு செய்து, அவர்களின் 31 ஆண்டுகால நடைமுறை அரசை ஆக்கிரமித்ததின் பின்னரான தமிழரசுக் கட்சியின் தலைமை, "சர்வதேச சட்டங்களின் கீழான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து வழக்குத் தொடுப்பதற்கான முக்கிய பொறுப்பு சிறீலங்கா அரசாங்கத்துக்குரியது" என உள்ளகப் பொறிமுறைக்குள் ஈழத் தமிழின அழிப்பு விசாரணைகளை முடக்கியது வரலாறு. தற்போது இவர்களின் அதே கருத்தையே ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையும் அப்படியே வெளிப்படுத்தியுள்ளதை, அறிக்கையைப் படிக்கும் எவரும் புரிந்து கொள்வர். சிறீலங்காவின் முயற்சிகளுக்கு அனைத்துலக வழிமுறைகளால் ஆதரித்து ஆதரவளித்தல் என்பதே இந்த அறிக்கையின் நெறிப்படுத்தலாக உள்ளது. இந்த முறையிலேயே, "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் வலுப்படுத்தப்பட்ட திறனைப் பயன்படுத்தி, பொறுப்புக்கூறல் தொடர்பான பணிகளைச் சிறீலங்கா மேற்கொள்வதற்கும், நல்லிணக்க முயற்சிகளுக்குப் பங்களிப்பதற்கும் உதவுதல்" என்ற வரைபடத்தையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை உணரத் தேவையான நிதி வலுவைச் சிறீலங்கா அரசுக்கு வழங்கவும், சிக்கன நடவடிக்கைகள் நாட்டின் மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கான திறனைக் குறைமதிப்புக்கு உட்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும், அனைத்துலக நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிப்புறக் கடன் வழங்குநர்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். இது ஒருவகையில் சிறீலங்காவின் இன்றைய திட்டங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ஏற்று, அதற்கான நிதியுதவியை விதந்துரைக்கும் செயற்பாடாகவே உள்ளது.

மேலும், தற்போதைய சிறீலங்கா அரசாங்கம் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சட்ட விசாரணைகளில் முன்னேறுகிறது என்ற பாணியிலேயே அறிக்கை அமைந்துள்ளமை, அறிக்கையின் எதார்த்தத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினையை அறிக்கை பிரிவினையாகவே அறிவித்துள்ளமையைப் பார்க்கின்றபோது, அதுவும் தமிழரசுக் கட்சி "நாங்கள் பிரிவினை கோரவில்லை" எனத் தேசிய விடுதலை இயக்கம் பிரிவினை கோரியதாக வெளிப்படுத்திய கருத்தியலின் தாக்கம் என்பது தெட்டத் தெரிகிறது. எனவே, ஈழத் தமிழரின் பெரும்பான்மைக் கட்சியெனத் தன்னை முன்னிலைப்படுத்தும் தமிழரசுக் கட்சி சிறீலங்கா ஆட்சியை ஏற்பதும், அதன் உள்ளகப் பொறிமுறையில் தீர்வு காணலாம் என நம்பிக்கை வெளிப்படுத்துவதுமே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் மூலம் கூட, கடந்த 16 ஆண்டுகளாக அனைத்துலக விசாரணையைப் பாதிப்புற்ற ஈழத் தமிழர்களால் பெற இயலாது இருக்கிறது. மாற்று அரசியல் தலைமையொன்றை ஈழத் தமிழர்கள் உருவாக்கும் வரை, இந்த இயலாமை தொடரத்தான் செய்யும். இன்றைய செம்மணியின் ஈழத் தமிழின அழிப்பு ஆதாரங்கள் கூட, அதற்குரிய அனைத்துலக கவனத்தை எட்டுவது மிகக் கடினமாக இருக்கும் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

அதே வேளை, உலக மக்களினமான ஈழத் தமிழர்களாலும், தாங்கள் வாழும் நாடுகள் உட்பட ஒரு நாட்டைக் கூட ஈழத் தமிழர்களுக்கான அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வைக்க இயலாதிருப்பதன் காரணம் புலம்பெயர் ஈழத் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் நாடுகளின் அல்லது அமைப்புக்களின் சார்புநிலையில் அனைத்துலக விசாரணையைக் கொண்டுவர வைக்கலாம் என்னும் நோக்கும் போக்குமே ஆகும். இவை நடைமுறைச் சாத்தியமாகா என்பதை, ட்ரம்ப்-பூட்டின் அலாஸ்கா பேச்சுச் சுற்றில் பாதிப்புற்றுள்ள உக்ரேனின் நேரடிப் பங்களிப்பு இல்லாமலே, உலகின் வல்லாண்மைகளான அமெரிக்காவும் ரஸ்யாவும் தாம் விரும்பியவாறு உக்ரேனின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறோம் என உக்ரேன் மக்களின் நிலத்தைத் தாம் நினைத்த மாதிரி பங்கீடு செய்யவும் பயன்படுத்தவும் முயல்வதும் விளக்கியுள்ளது.

இவ்வாறு, உலகில் பாதிப்புற்றவர்களின் பங்களிப்பு இல்லாமல், ஆக்கிரமிப்பாளரும் உலகின் வல்லாண்மை மேலாண்மை நாடுகளும் பாதிப்புற்றவர்களின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தாம் விரும்பிய தீர்வு காணும் புதிய அரசியல் போக்கை, இந்தியாவே 1987இல் இந்தோ-சிறீலங்கா ஒப்பந்தத்தை ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பின் பங்களிப்பு இன்றி செய்து தொடக்கிவைத்தது என்பது உலக வரலாறாக உள்ளது.

இதற்கு அந்நேரத்தில், ஈழத் தமிழர்களின் பாராளுமன்ற அரசியல் தலைமையாக இருந்த தமிழரசுக் கட்சியே பக்கத்துணையாக நின்று, ஈழத் தமிழர்களின் இறைமையைத் தேசியத்தை ஒடுக்கமடைய வைத்தது என்பது, ஈழத் தமிழின அரசியல் வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். அதுவரை நேரடியாக ஈழத் தமிழர் அரசியலில் தலையீடு எதனையும் செய்யாதிருந்த இந்தியாவை, ஈழத் தமிழர் அரசியலின் மேலாதிக்க சக்தியாக மாற்றிய தமிழரசுக் கட்சியின் இச்செயலே, ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமையை ஈழத் தமிழர்கள் பயன்படுத்தித் தங்கள் அரசியல் எதிர்காலத்தை அமைக்க இயலாதவாறு, அவர்களை உள்நாட்டு-வெளிநாட்டுப் பேச்சுக்களில் இறைமையாளர்களாகப் பங்கேற்க இயலாத புதிய அரசியல் எதார்த்தத்தை உருவாக்கியது என்பதும் வரலாறு.

இவற்றை உணர்ந்துதான், ஈழத் தமிழர் தேசியப் பேரவையின் சார்பில் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராக மக்களாணை உடையவரும், சட்டத்தரணியும், ஈழத் தமிழர் அரசியலின் அங்கமாக 80 ஆண்டுகள் அனுபவமுடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் சமகாலத் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "எவ்வாறாவது தமிழரசுக் கட்சியுடன் உரையாடல்களை நடாத்தி, ஈழத் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொதுவான கோரிக்கையொன்றை அனைத்துலக விசாரணைக்கு முன்வைக்கும் முறையில் அரசியல் சூழ்நிலையை உருவாக்காது விட்டால், சிறீலங்கா இன்று உருவாக்கிக் கொண்டிருக்கும் அதன் அரசியலமைப்பில் ஈழத் தமிழர்களின் இருப்பை உறுதிப்படுத்தக் கூடிய, ஈழத் தமிழரின் தேசிய ஒருமைப்பாட்டுடன் கூடிய அரசியல் அமுக்கத்தை ஏற்படுத்தாது விட்டால், ஈழத் தமிழ்த் தேசியம் அழிந்துவிடும் அபாயம் பலமாக உள்ளது" என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கு எதிர்வினையாக, ஈழத் தமிழர் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கச் செயலில் முயன்று வருகின்றார். இந்தக் கட்சிசார்பற்ற முயற்சிக்கு இலக்கு, அவர் அதை ஆரம்பித்த நாளில் இருந்து தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதன் அவசியத்தை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை கடந்த வாரத்தில் நிரூபித்துள்ளது.

இன்னும் பழைய சித்தைகளில் புதிய திராட்ச இரசத்தை வார்த்து, அது சித்தைகளை வெடிப்பித்துச் சிந்திப்போக வைக்கும் முட்டாள்தனமான அரசியலை நடாத்துவதை விடுத்து, கஜேந்திரகுமாரின் முன்முயற்சிகளில் குறை கண்டால், அதை நிறைவு செய்யக் கூடியனவற்றைச் செய்து, அந்த முயற்சியை ஈழத் தமிழினத்தினை இன அழிப்பு செய்தவர்களுக்கான தண்டனை நீதியையும், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகார நீதியையும், அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் அவர்கள் பெற உழைத்தால் மட்டுமே, செம்மணியின் இன்றைய சாட்சியங்கள் கூட உலகால் அதற்குரிய முறையில் கவனம் பெறும் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**



# இரகசியத்தன்மை 'அரசியல் சிதைவின்' ஆரம்பம்

## 'அநுர அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகளை தமிழினமாக கையாள்வது எவ்வாறு?'

விதுரன்

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில், அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.



பிரதமர் கலாநிதி.ஹரிணி அமரசூரிய பாராளுமன்றில் முதன்முதலாக புதிய அரசியலமைப்பு சீர்திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டதாக அறிவித்தார். அதில் கூட மயக்கமான நிலைமை தான். புதிய அரசியலமைப்பு பணியா அல்லது அரசியலமைப்பு சீர்திருத்தமான என்பதில் தெளி வில்லை.

இந்த விடயத்தினை மையப்படுத்தி ஜே.வி.பி.தலைமையிலான அரசாங்கம் புதிய அரசியமைப்புக்கான பணிகளையோ அல்லது, சீர்திருத்தத்துக்கான பணிகளையோ முன்னெடுக்குமாக இருந்தால் அதற்கான திரைமறைவு நோக்கங்களை இம்மாதத்தின் 2ஆம் திகதியன்று வெளியான இலக்கு வாரஇதழ் 'மீண்டும் அரசியலமைப்பு' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார அரசியலமைப்பு பணிகள் வினைத்திறனாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவித்துள்ளார். ஆனால் அந்தப் பணிகள் எங்கு நடைபெறுகின்றது என்பதை கூறுவதற்கு அவர் மறுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் நிலையில், அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்வதற்கு மாறாக 'மக்களின் அபிலாசைகளை' நிறைவேற்றுவதாகவும், 'யாப்புருவாக்கப் பணிகள் வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்படுவதாகவும்' கூறுகிறது.

அரசாங்கத்தின் இத்தகைய இரகசியத் தன்மை, அதன் நோக்கம் குறித்து பல சந்தேகங்களை எழுப்புகிறது. புதிய அரசியலமைப்பொன்றின் உருவாக்கத்தில் வெளிப்படைத்தன்மை ஏன் அவசியம் என்பதையும், சிறுபான்மை மக்களின் உரிமைகளை உள்ளடக்குவதில் உலக நாடுகள் எவ்வாறு வெற்றிகரமாகச் செயற்பட்டுள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது அதன் சட்டங்களுக்கு எல்லாம் மேலான உயர்ந்த சட்டம். அது மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை வரையறுக்கிறது. எனவே, அத்தகையதொரு ஆவணத்தை உருவாக்குவது என்பது ஒரு சிலரின் அல்லது குழுவொன்றின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு உட்பட்டதாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கவும் முடியாது.

அரசியலமைப்பு உருவாக்கம் என்பது பொது விவாதங்களுக்கும், அனைத்துத் தரப்பினரின் பங்களிப்புக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் அநுர அரசாங்கம் புதிய அரசியலமைப்புருவாக்கப் பணிகளை இரகசியமாக வைத்திருப்பது, மக்களின் நம்பிக்கையைக் குறைப்பதுடன், அதன் உண்மையான நோக்கங்கள் குறித்து சந்தேகங்களை வலுவாக ஏற்படுத்துகிறது.



புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் அனைத்து தரப்புக்களையும் உள்ளடக்கியதாக உரிய நடவடிக்கைகள் மூலமாக முன்னெடுக்கப் படாமையானது, ஜனநாயக மரபுகளுக்கு முரணானது.

உலகம் முழுவதும் பல நாடுகள் புதிய அரசியலமைப்பை உருவாக்கும்போது வெளிப்படைத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளன. உதாரணமாக, தென்னாப்பிரிக்காவின் அரசியலமைப்பு உருவாக்கமொரு சிறந்த உதாரணமாகும்.

நிறவெறிக் கொள்கை முடிவுக்கு வந்த பின்னர், ஜனநாயக அரசியலமைப்பை உருவாக்குவதற்கு பரந்த மக்கள் பங்களிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதற்காக, ஒரு அரசியலமைப்பு சபை அமைக்கப்பட்டு, அது நாட்டின் அனைத்து சமூகங்களையும், கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும், சிவில் சமூக அமைப்புகளையும் உள்ளடக்கியிருந்தது.

பொதுமக்கள் கருத்துக்களைக் கேட்பதற்காக நாடு முழுவதும் பொது விவாதங்கள், கருத்தரங்குகள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, தென்னாப்பிரிக்காவின் அரசி யலமைப்பு அனைத்து சமூகத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, வலுவான மற்றும் நிலைத்தன்மையுள்ளதொரு ஆவணமாக உருவெடுத்தது.

இவ்வாறான நிலையில் இரண்டாவது முக்கியமான விடயம் இலங்கையில் உள்ள சிறுபான்மை தமிழ் மக்களின் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாகும். இலங்கையைப் பொறுத்தவரை, சமஸ்டி முறைமைக்கான கோரிக்கை என்பது தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசையாக உள்ளமை வரலாறு.

ஆனால், இந்த கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. சமஸ்டி என்பது அதிக செறிவு நிறைந்த விடயமாகவே இன்னமும் பார்க்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளில் தமிழ் மக்களின் அபிலாசைகளை எவ்வாறு உட்புகுத்துவது என்பதற்கு அப்பால் அதுபற்றிய உரையாடலை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதே தற்போது பெருங்கேள்வியாக மாறியுள்ளது.




சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, தேசிய ஒருமைப்பாட்டை உறுதி செய்துள்ள பல உலக உதாரணங்கள் உள்ளன. கனடா ஒரு சிறந்த உதாரணமாகும். கியூபெக் மாகாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பேசும் மக்கள், தமது மொழி மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு தனித்துவமான நிலையை அனுபவிக்கின்றனர். கனடாவின் அரசியலமைப்பு, மொழி உரிமைகளையும், மாகாணங்களுக்கு பரந்த அதிகாரங்களையும் வழங்கியுள்ளது.

இது கனடாவை ஒரு பலமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட நாடாக நிலை நிறுத்தியுள்ளது. அதேபோல, சுவிட்சர்லாந்து ஒரு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

கட்டுரை

# செம்மணி ஆவண நூல் வெளியீடு.







கொழும்பு தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை கேட்போர் கூட்டத்தில்நேற்று *(14.08.2025)* பிற்பகல் *2:30* மணியளவில் தென் இலங்கையைச் சேர்ந்த இளம் ஊடகவியலாளர்களும் செயற்பாட்டாளர்களுமான தரிந்து ஜெயவர்தன, தரிந்து உடுவரகெதர, எம். எப்.எம் பசீர் ஆகிய மூவரும் இணைந்து எழுதி வெளியீடு செய்த செம்மணி எனும் ஆவண நூல் வெளியிடப்பட்டது.



சர்வதேச அளவில் பேசுபொருளாக மாறியிருக்கின்ற செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்ற இவ்வளவில், செம்மணி எனும் பெயரிலே அந்த செம்மணியில் நடந்த கொடூரங்களை விவரிப்பதாக இந்த புத்தகம் ஒரு ஆவணமாக ஆக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




தென் இலங்கை இளைஞர்கள் எடுத்திருக் கிற இந்த முயற்சி, தமிழர் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பு தொடர்பான விழிப்புணர்வைத் தென் இலங்கை மக்களிடம் கொண்டு சேர்க்கப்படவிருக்கின்ற முதல் படியாகப் பார்க்கப்பட வேண்டியிருக்கிறது.



இந்நிகழ்வில், இந்நூல் தொடர்பாகவும், செம்மணி, மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் நடத்தியிருந்தனர். இதில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்,










சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா மற்றும் மூத்த சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்வியியலாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.



இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் தென்னிலங்கையில் இருந்து கலந்து கொண்டிருந்தனர். அம்பாறையில் இருந்து மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததோடு, சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலை விரைவில் தமிழிலும் மொழிபெயர்ப்புச் செய்யவும், இந்நூலிலுள்ள விடயங்களைப் பகுதி பகுதியாகத் தாமும் தமிழில் தொகுத்து வெளியிடவுள்ளதாகவும், இதுபற்றி நூலாசிரியர்களில் ஒருவரான தரிந்து உடுவரகெதர வும் தம்முடன் பேசியதாகவும் கூறினார்.

• • •



## தமிழீழம் கேட்டு போராடிய இனம்

# இன்று காற்றாலையை தடுக்கப் போராடும் நிலை

**பா. அரியநேத்திரன்**

“எமது நிலம் எமக்கு வேண்டும்” என தமிழீழம் கேட்டு, அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் தொடர்ந்து 76 வருடங்களாகப் போராடியும் போராடிக்கொண்டுள்ள தமிழ் இனம், தற்போது மன்னார் காற்றாலையைத் தடுக்கக் கோரியும் இதே சுலோகத்தை முன்நிறுத்தி “எமது நிலம் எமக்கு வேண்டும்” எனப் போராடும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கில் உள்ள தமிழர்களின் நிலைமை, எல்லா விடயத்திற்கும் போராடியே ஆளும் தரப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியவர்களாக எமது வாழ்க்கை முறை மாறிவிட்டது. கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, வடகிழக்கில் இருந்து தெரிவான ஆளும் தரப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், இனம் சார்ந்தோ, நிலம் சார்ந்தோ, ஆக்கிரமிப்பு சார்ந்தோ குரல் கொடுக்க முடியாத பேசா மடந்தைகளாக உள்ளனர்.



இலங்கையின் பல்வேறு பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், மன்னார் தீவுப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மற்றும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் குறித்து தொடர்ந்து சர்ச்சை நிலவி வருகின்றது.

இலங்கை மின்சார வாரியத்திற்குச் சொந்தமான 30 காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், மேலும் சில காற்றாலைக் கோபுரங்கள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன. அத்துடன், இந்தியாவின் அதானி நிறுவனம் மன்னார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த சூழ்நிலையில், அந்தத் திட்டத்திலிருந்து தாம் வெளியேறுவதாக அண்மையில் அறிவித்திருந்தது.

மன்னாரில் அமைக்கப்படவுள்ள இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலைப் பண்ணை, மன்னார் தீவின் தெற்குக் கரையில் அமைந்துள்ள மன்னார் காற்றாலை மின்வலுப் பண்ணையாகும். முதலாவது படியாக, 100 மெகாவாட் காற்றாலை மின்சக்தி வளர்ச்சி செய்யப்படும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.



அங்குள்ள மக்களின் விருப்பம், புவியியல் இயற்கைச் சூழல், காலநிலை என்பவற்றைக் கணக்கில் எடுத்து, மன்னார் மாவட்ட மக்களின் ஆதரவு இன்றி இந்தத் திட்டம் ஏற்படுவதை முழுமையாக மக்கள் எதிர்க்கின்றனர்.

இது தொடர்பாக, மன்னார் மாவட்ட மக்களின் கருத்து: “மன்னார் தீவில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள காற்றாலைகளால் நாம் பல்வேறு இன்னல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம். வெள்ளத்தால் பெண்களின் வீட்டுத் தோட்டங்கள் நாசமடைந்து போனது. அபிவிருத்தித் திட்டங்கள் எமது சமூக, பொருளாதார, மனித உரிமைகளைப் பாதிக்கும் விதத்தில் இருக்கின்றன” எனக் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை.

ஐக்கிய நாடுகள் புலம்பெயர் உயிரினங்களைப் பாதுகாப்பது தொடர்பான பேரவையின் பிரதான நாடாக இலங்கை விளங்கு கிறது. இதற்கான காரணம், ஆண்டுதோறும் 30க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து 250க்கும் அதிகமான பறவை இனங்கள் இலங்கைக்குப் புலம்பெயர்வதனாலாகும். வருடந்தோறும் இலங்கைக்கு 15 இலட்சம் பறவைகள் வருவதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் பிரதேசத்திற்கு மாத்திரம் 10 இலட்சம் பறவைகள் வருகை தருகின்றன.

இவ்வாறு வருகின்ற பறவைகளின் பயணப் பாதையும் இருப்பிடங்களும் பாதிப்படைவதாகவும், காற்றாலைகளின் இயக்கத் தால் பறவைகள் உயிரிழப்பதாகவும், சூழலியல் நீதிக்கான நிலையத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்தியா வின் அதானி நிறுவனத்தின் திட்டத்தில் பறவைகளுக்கான தாழ்வாரப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், அவை பெயரளவிலானதுமட்டுமே.

பொதுமக்கள் ஏன் எதிர்க்கின்றனர். என்பதை ஆராயப்பட வேண்டும். “அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்த வேண்டும்” என்பது அவர்களின் கோரிக்கை. இலங்கையின் மீன்பிடித் தொழில், பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கைக் காற்றின் வலு முதலானவற்றிற்குப் பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது. மன்னார் பல பொருளாதார வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசம்.



இந்த நிலையில், ஏகபோக இராட்சத பன்னாட்டுக் கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத் தன்மையாலும், அழிவை எதிர்நோக்கி உள்ளது மன்னார் தீவு.

**ஏற்கனவே உள்ள காற்றாலைகளால்:**

- மீன் கரைக்கு வருவது குறைந்துவிட்டது.
- மீன் இனப்பெருக்கம் குன்றிவிட்டது.
- காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்பட்ட மாறுதல்கள், வடிகால் அமைப்பை மாற்றி வெள்ளப் பெருக்கையும், நிலத்தடி நீர் உவர்ப்புத்தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.
- காற்றாலைகளின் இரைச்சலால், மன்னாருக்கு வரும் வலசைப் பறவைகளின் வருகையைத் தடுக்கவும், பாதையை மாற்றவும் அவை காற்றாடிகளால் இறக்கும் நிலையையும் ஏற்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

ஆய்வு அறிக்கை

# விடுதலைப் போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது?

"உன்னை நீ கைவிட்டு விட்டால் உன்னைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது" என்று ஒரு பிரெஞ்சு பழமொழி உண்டு. உன்னை நோக்கிப் பிறரைத் திரும்பிப் பார்க்கச் செய்ய வேண்டுமேயாயினும், நீயே சத்தமிட வேண்டும். ஒரு பச்சைக் குழந்தை கூட தன்னருகே யாரும் துணையில்லை என்றால் அழுது, கத்தி யாரையும் தன்பால் ஈர்த்துவிடும்.



இனப்படுகொலைக்குள்ளான ஈழத் தமிழர்கள், கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாகப் போராடாதிருக்கும் நிலையில், உரியவனும் பாரான்; அடுத்தவனும் பாரான்; அண்டை நாடும் பாராது; வெளிநாடுகளும் பாராது. உனக்கு யாரும் கை கொடுக்க வேண்டுமாயின், நீயே கை தூக்க வேண்டும். ஆதலால், களத்தில் போராடுவதன் மூலம் மட்டுமே உள்ளும் புறமும் கவனத்தை ஈர்த்துப் போர்க் கொடியைச் சர்வதேசத் தளத்தில் நிறுத்த முடியும்.

"Only the fittest will survive" ("தக்கன மட்டுமே உயிர் வாழும்") - அதாவது, இங்கு காணப்படும் சூழலுடன் தன்னையும் இணைத்துத் தனக்குப் பொருத்தமாகக் கையாளத் தெரிந்தவை மட்டுமே உயிர் வாழும் என்பதே இதன் முழுமுதற் பொருள்.

இந்த உயிரியல் டார்வினிசத்தைச் சமூக அல்லது அரசியல் டார்வினிசமாகக் கையாளும் போது, அதை அதிகம் தலைமைத்துவப் பண்புடன் கூடிய வகையில் கையாள வேண்டும். உயிரியல் டார்வினிசத்தில், அந்த உயிருக்குச் சுயநல உயிரியல் மரபணு (selfish gene) இயல்பாக இயற்கைத் தேர்வின் படி தத்துவத்தை வழங்குகிறது.

மனிதனும் உயிர் என்ற வகையில் சுயநல மரபணுவைக் கொண்டவனேயானாலும், ஒரு சமூகமாக இருந்தபோது, அங்கு மேலதிகமாகத் தலைமைத்துவ ஆளுமை தேவைப்படுகிறது. இந்த வகையில், உயிரியல் டார்வினிசத்திலிருந்து சமூகவியல் டார்வினிசம் குறிப்பிடத்தக்க அளவுக் குத் தெளிவான ஆளுமைப் பரிமாண வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

சமூகப் பரிமாணத்தைக் கட்டமைப்புச் செய்து முன்னெடுக்கும் விதத்தில் தவறுகள் இழைக்கப்பட்டால், அந்தச் சமூகம் தக்க தேர்வின்றித் தேய்ந்து போய் அல்லது அழிந்து போய்விடும். அதாவது, உயிரிகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட உயிர்களின் தலைமைத்துவத் திறப்பால், மனிதச் சமூகத்தில் நுண்ணறிவும் முன்னறிவும் கொண்ட அளவாற் பெரிய ஓரினம் (சிங்கள இனம்), அளவாற் சிறிய இனங்களின் மீது அதிகதலைமைத்துவ ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலம், சிறிய இனங்களின் தெரிவு சுருங்கும், பாதிப்புக்குள்ளாகும், சீரழிவுக்கு உள்ளாகும்.

இந்த வகையில், ஈழத் தமிழர்கள் அதிகம் தலைமைத்துவப் பண்புடனும் முனைப்புடனும் செயல்பட்டால் மட்டுமே, காணப்படும் சமூகச் சூழல் யதார்த்தத்தில் தம்மைத் தக்கவைக்க முடியும்.

மனிதனும் ஏனைய பிராணிகளைப் போல ஓர் உயிர் என்பதால், உயிரியல் டார்வினிசத்திலுள்ள பொதுத்தன்மைகள் மனிதனுக்கும் உண்டேயானாலும், உயிரினங்களில் அதிக நுண்ணறிவு கொண்டு மனிதன் சமூகமாகத் தன்னைக் கட்டமைப்பதில் வேறுபட்ட ஆளுமை அளவுகளைப் பிரயோகிக்க முடிகிறது.

மு.திருநாவுக்கரசு

அரசுள்ள அளவாற் பெரிய சிங்கள சமூகத்தோடு, அரசற்ற அளவாற் சிறிய தமிழ்ச் சமூகம், தலைமைத்துவ ஆளுமையில் தக்க முனைப்பைக் காட்டத் தவறினால், அந்தச் சமூகம் தன் வாழ்நிலையை இழந்துபோக நேரும்.

இந்நிலையில், ஈழத் தமிழர்கள் தம்மைத் தமிழர் என்ற உட்சமூக ரீதியாகவும், இலங்கை என்ற உள்நாட்டு ரீதியாகவும், அண்டை நாடு, வெளிநாடுகள், சர்வதேச சமூகம், உலகளாவிய அரசியல் நிலை போன்ற காணப்படும் அனைத்துப் புறநிலை மாற்றங்களுக்கும் பொருத்தமாக, தமக்கான தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டும்.

அந்த வகையில், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலான அரசியற் சூழலில், ஈழத் தமிழர் நிலையானது "கூழ்முட்டை" (Rotten egg) நிலையையே கொண்டுள்ளது. மேற்படி நடப்புநிலை, உள்ளூர், உள்நாட்டு, வெளிநாட்டு, உலகளாவிய யதார்த்தத்தை உள்வாங்கி, இப்போது ஒரு புதிய வகையில் தமிழ்த் தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டும் என்று இக்கட்டுரை வேண்டி நிற்கின்றது.



ஏறக்குறைய 1970களின் பிற்பகுதியளவில், ஒற்றை உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஆரம்பமான ஆயுதப் போராட்டம், தரைப்படை, கடற்படை, பீரங்கிப்படை, விமானப்படை, சர்வதேச சரக்குக் கப்பல் அணியென வளர்ந்த நிலையில், கோட்டை கொத்தளங்களெல்லாம் அழிந்தவாறு, குண்டூசிகூட இல்லாத நிலையை ஆயுதப் போராட்டம் அடைந்துள்ளது.

ஆனால், 1979 ஆண்டு 10 ஆயிரத்துக்குட்பட்ட படையினருடன் ஒரு பிரிகேடியரைத் தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்த இலங்கை இராணுவம், இன்று அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய வகையில் 3 லட்சத்து 46 ஆயிரம் படையினருடன் காணப்படுகிறது.

நாடாளுமன்ற அரசியலில் 21 உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று சிதைந்து, சுக்குநூறாகி, தமிழரசுக் கட்சி எட்டு உறுப்பினர்களையும், சனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு உறுப்பினரையும், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு உறுப்பினரையும் பாதிக்குமேல் சுருங்கிக் கிடக்கிறது. மேலும், சனநாயகப் பண்பற்றுச் சீரழிந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது.

2001 ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீதான தாக்குதல், உலகெங்கும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் முதுகெலும்பை உடைக்க வழிவகுத்த போதிலும், அதுவே உலகெங்கும் மக்கள் போராட்ட அலைகள் எழும்புவதற்கு ஏதுவாகவும் அமைந்தது. எனவே, "மக்கள் போராட்ட அலை" எனும் ஓராயுதம் உலக அரங்கில் முதன்மை பெறத் தொடங்கியது. பறிக்கப்பட்ட வெடிகுண்டு, துப்பாக்கி ஆயுதத்துக்குப் பதிலாக, மக்கள் திரளெனும் ஓராயுதம், மக்கள் சனநாயகக் கிளர்ச்சியாய் வடிவம் பெற்றது.



முள்ளிவாய்க்காலில் இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்ததோடு முடிந்துவிடவில்லை. அங்கு, அரச இராணுவம் தனது இராணுவச் சூளையில், "இனப்படுகொலை" என்னும் மிகக் கூரியதோர் ஆயுதத்தை உற்பத்தி செய்தது. எனவே, முள்ளிவாய்க்காலில் பறிபோன துப்பாக்கி, வெடிகுண்டு ஆயுதங்களுக்குப் பதிலாக, மக்கள் காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டதன் வாயிலாக, "இனப்படுகொலை" என்னும் ஆயுதம் தமிழ் மக்கள் கைக்குக் கிடைத்தது.

இந்த வகையில், "இனப்படுகொலை" என்ற ஆயுதத்தை முதலீடாகக் கொண்டு, தமிழ்மக்கள் தமது அரசியற் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று, 2016 ஆம் ஆண்டு இக்கட்டுரையாசிரியரால் எழுதப்பட்ட "டொனமூர் முதல் சிறிசேன வரையான உத்தேச அரசியல் யாப்பு" என்ற நூலில் தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அந்நூல் வெளியீட்டு விழாவில், தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் உட்பட, பல்வேறு அரசியற் தலைவர்களும், பல்கலைக்கழக அறிஞர்களும், ஊடகவியலாளர்களும் உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது, ஈழத் தமிழர்களின் குறைந்தபட்ச உரிமைக்கான போராட்டங்களைக் கூட இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

முதலாவதாக, இலங்கையில் நடைமுறையிலுள்ள நாடாளுமன்ற மரபு அரசியற் பாதை, இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அதை வளர்க்கவே உதவியுள்ளது என்பதை, 1833 ஆண்டு நடைமுறைக்கு வந்த "கோல்புரூக் யாப்பு" நடைமுறையிலிருந்து, இன்றைய (2025) ஆட்சியாளர்களின் யாப்பு நடைமுறை வரை, வெள்ளிடை மலையெனத் தெரிகிறது.

தமிழ்த் தலைவர்கள், குறிப்பாக "சோல்பரி அரசியல் யாப்பு" ஒட்டிய காலத்தில், 14 மணி

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்





# ஐ.நா.உயர்ஸ்தானிகரின் அறிக்கையால் ஏமாற்றம்

*‘ஆட்சியில் அமர்ந்துள்ள அநுர அரசாங்கத்துக்கு வாய்ப்பளிக்கும் வகையிலும், உள்ளகப் பொறிமுறைகளை ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அமைந்துள்ள உயர்ஸ்தானிகரின் அறிக்கை பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர்க் கோரிக்கைகளை மறுதலிப்பதாக உள்ளது’*

**விதுரன்**




இலங்கையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கை பல எதிர்பார்ப்புக்களையும், அதேசமயம் ஆழமான ஏமாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மை, நீதி, மற்றும் நிலையான சமாதானத்தை அடைவதற்கு புதிய அரசாங்கத்துக்கு ஒரு ‘வரலாற்று வாய்ப்பு’ இருப்பதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டினாலும், கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், அவற்றின் நிறைவேற்ற மின்மையும் பாதிக்கப்பட்ட மக்களிடையே நம்பிக்கையின்மையை அதிகரித்துள்ளது.

இந்த அறிக்கை, அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலில் உள்ள குறைபாடுகளையும், உள்நாட்டுப் பொறிமுறைகளை மீளவும் திணிப்பதற்கான ஐ.நா.வின் முயற்சிகளையும் வெளிப்படுத்துகிறது. இது பாதிக்கப்பட்ட மக்களின் நீண்டகால போராட்டங்களையும், அவர்களின் எதிர்பார்ப்புகளையும் புறக்கணிப்பதாக அமைந்துள்ளது.



ஆட்சியில் அமர்ந்துள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், அரசியல், சமூக, மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை முன்னெடுப்பதாக அளித்த வாக்குறுதிகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், நடைமுறையில் இந்த வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறுவதில் கடுமையான தாமதங்கள் காணப்படுகின்றன.



உதாரணமாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தாலும், அந்தச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், நினைவேந்தல்களை ஒழுங்கு செய்தவர்கள் எனப் பலரும் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது, அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும், அதன் நடைமுறைச் செயற்பாடுகளுக்கும் இடையேயான பாரிய இடைவெளியைக் காண்பிக்கிறது. ஒருபுறம் சீர்திருத்தங்கள் குறித்த உறுதிமொழிகளை அளித்துக்கொண்டு, மறுபுறம் அடக்குமுறைச் சட்டங்களை தொடர்ந்து பயன்படுத்துவது, புதிய அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பான நிலைப்பாட்டில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இதேபோல், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டு பல ஆண்டுகளாகியும், ஆயிரக்கணக்கான காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஆகக் குறைந்து ஒரு சம்பவம் சம்பந்தமாகவேனும் முறையான கையாளல் நடைபெறவில்லை.

இந்த அலுவலகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், அதனை சீரமைத்து வெளிப்படையான இலக்குகளுடன் செயற்படுத்த வேண்டும் என்று ஐ.நா. அறிக்கை வலியுறுத்துகின்றமையானது எந்தளவுக்கு பிற்போக்குத்தனமானது.



காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை வினைதிறனாகச் செயற்படுத்துவதில் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. அதுவொரு சர்வதேச கண்துடைப்புக்கான சான்றுப்பொருளாகவே பேணப்படுகிறது.

இந்நிலையில் கடந்தகால மீறல்களுக்கு காரணமானவர்களைப் பாதுகாப்பதிலும், இனவாத அரசியலை முன்னெடுப்பதிலும் கவனம் செலுத்திய கடந்தகால தலைமைகளின் அதேபாதையில் புதிய அரசாங்கமும் பயணிக்கிறதா என்ற சந்தேகம் வலுக்கிறது.



ஜனாதிபதி அநுரகுமார தனது கொள்கைப் பிரகடன உரையில், கடந்தகால இழைக்கப்பட்ட அநீதிகளை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதனை நிவர்த்தி செய்வதற்கான உறுதியான, காலவரையறையுள்ள திட்டங்கள் எதனையும் அவர் அறிவிக்கவில்லை. அவர் அதனை எதிர்காலத்தில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கவும் முடியாது.



ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், அரசாங்கத்தின் அழைப்பில் இலங்கைக்கு வருகை தந்திருந்தாலும் அவர் தற்போது பேசுபொருளாகவுள்ள செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்டிருந்தார்.

பச்சிளம் பாலகர்கள் முதல் வயது வேறுபாடுகளின்றி கொன்று புதைக்கப்பட்டுள்ளமையை நேரில் அவதானித்தார். தமிழினப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பது அவரது மனச்சாட்சியின் கதவுகளை நிச்சயமாக தட்டியிருக்கும்.

அதற்குச் சான்றாக, உயர்ஸ்தானிகரே அகழ்வுப்பணிகளில் சர்வதேச நிபுணர்களின்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# சூழ்ச்சியில் சிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள்

மருதன் ராம்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காளியாக உள்ள பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் பல செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக அந்த மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிறது. இந்த வரிசையில் தற்போது தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் முறைசாரா மயமாக்கலும் ஊக்குவிக்கப்படுகிறது. உண்மையில் இதன் பாதக விளைவுகள் குறித்த போதிய தெளிவுபெருந்தோட்ட மக்களிடையே காணப் படுவதில்லை. அந்த அடிப்படையில் இலங்கையில் உள்ள தேயிலை மற்றும் இறப்பர் தோட் டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் முறை சாராமுறை (தற்காலிகமயமாக்கல்) என் றால் என்ன என்ற விளக்கம் வழங்கப்பட வேண்டும்.



பெருந்தோட்ட கம்பனிகள் பெருந் தோட்ட தொழிலாளர்களுக்கு சலுகைகளுடன் வழங்க வேண்டிய தொழிலை மாற்றி சலு கையின்றி புதிய வடிவங்களில் தொழில் வழங்குவதைமுறைசாரா முறைமை என லாம். முறைசாரா மயமாக்கல் அல்லது தற்காலிக மயமாக்கல் என்பது பெருந்தோட்டங்களில் தற்போது அதிகரித்து செல்லும் ஒரு போக்காக காணப்படுகின்றது. பெருந்தோட்ட துறைகளை சேர்ந்த கம்பனிகள் முறைசாரா தொழில் முறைமைகளை தோட்டங்களுக்குள் கொண்டு வருகின்றன. துண்டு காணி முறைமை, போட்லீப் முறைமை, ஆர்.எஸ்.எம் முறைமை, பை பேக் முறைமை மற்றும் உற்பத்தி அடிப் படையிலான கொடுப்பனவு முறைமை போன்ற முறைமைகளின் கீழ் தொழிலாளர் கள் தற்போது பணியாற்றுகின்ற நிலையில் உள்ளனர். எனினும் இதனூடாக தொழில் சட்டங்களின் கீழ் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற அவர்களின் உரிமைகளையும் சட்டமுறையான பாதுகாப்புகளையும் இழக்க நேரிடும். மகப்பேற்று விடுமுறை, சேமலாப நிதியங்கள் மற்றும் தொழில் பாதுகாப்பு போன்ற உரிமைகளுக்கான அணுகலுக்கு தொழிலாளர்கள் அனுமதிக்கப்படாமல் ஓரங்க ட்டப்படுகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.



பெருந்தோட்ட கம்பனிகள் முறைசாரா மயமாக்கலை பின்பற்றுவதற்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. கம்பனிகள் பிரதானமாக அவற்றின் செலவைக் குறைக்கும் நோக்கில் முறைசாரா முறைமைகளை பின்பற்றுகின்றன. மேலும் தொழிலாளர்களின் உரிமைகளான ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மகப்பேற்று விடுமுறைகள், சேவைகால பணம் மற்றும் நஸ்ட ஈடு என்பவற்றை கம்பனிகள் இனியும் தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டியதில்லை. அதனால் கம்பனிக ளின் ஒட்டுமொத்த செலவுகள் குறைகின்றன. அது மட்டுமன்றி பெருந்தோட்ட பராமரிப்பு செலவுகள் தொழிலாளர்களின் மீது சுமத்தப்படுகின்றன. செலவுகளில் மேற் கொள்ளும் இவ்வாறான குறைப்புகள் கம்பனிக ளின் லாபங்களை அதிகரிக்க வழிவகுக்கின்றன. அதேவேளை இவற்றின் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளின் தாக்கங்களை தொழிலாளர்களே எதிர்கொள்ள வேண்டியுள் ளன. தொழிலாளர்களின் உரிமைகளை மதிக்கா மல், அதிக வருமானம் ஈட்டும் மற்றும் குறைந் தளவு பொறுப்புக்கூறும் விதத்தில் செயற்படு வதற்கு இந்த முறைமை கம்பனிகளை அனு மதிக்கின்றது.

## சூழ்ச்சியுடன் நிலைமையை கையாளும் கம்பனிகள்

இந்த முறைசாரா முறைமைகளை தொழி லாளர்களிடம் கொண்டு செல்வதற்கு தோட்ட கம்பனிகள் பல மறைமுக சூழ்ச்சிகளை கையாளுகின்றன.

இதன்படி, கம்பனிகள் முறைசாரா மயமாக் கலை தொழிலாளர்களுக்கு ஒரு நெகிழ்வு தன்மை மிக்க மற்றும் வலுவூட்டும் முறையாக ஊக்குவிக்கின்றன 'தாம் வேலை செய்ய வேண்டிய மணித்தியாலயங்களை தொழிலாளர்களே தீர்மானிக்கலாம்'. 'நீண்ட ஓய்வு நேரங்களை விருப்பப்படி எடுத்துக்கொள்ளலாம்'. 'தாம் விரும்புகின்ற அளவுக்கு தேயிலையைப் பறித்து, முன்னரை விடவும் அதிகமாக வருமானம் ஈட்டலாம்'.

''அடிமை' என அழைக்கப்படும் முறை மையிலிருந்து விடுபடலாம்'. 'வேலையில் உதவ குடும்ப உறுப்பினர்களை அல்லது நண்பர்களை ஈடுபடுத்தலாம்' போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி கம்பனிகள் முறைசாரா முறைமையை ஊக்குவிக்கின்றன. இவ்வாறான வாக்குறுதிகள் தொழிலாளர்களுக்கு நலனாக தென்பட்டாலும் யதார்த்தத்தை மறைக்கின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளும் மற்றும் பாதுகாப்புகளும் மறுக்கப்படுகின்றன. அத்துடன் அவர்களின் உரிமைகள் மீறப்படும் போது பெரும்பாலும் தொழிற்சங்க ஆதரவி லிருந்து அல்லது சட்ட பரிகாரத்திலிருந்து ஓரங்கட்டப்படுகின்றனர்.



இந்த முறைமையின் ஊடாக தொழி லாளர்கள் பல முக்கிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். இதில் முதலாவதாக தொழிலாளர் உரிமைகள் இழக்கப்படுகின்றன. முறைசாரா முறைமைகளின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மகப்பேறு விடுமுறைகள், சேவைகால பணம், நஸ்ட ஈடு மற்றும் பிற தொழில் உரிமைகளை இழக் கின்றனர். தொழிற்சங்க பிரதிநிதித்துவம் இல் லாததால், தொழிற் சூழலின் நிமித்தம் தொழி லாளர்கள் கூட்டாக ஒன்றிணைந்து தங்களுக்கான உரிமைகளுக்காக பேரம் பேச முடியாது. இரண்டாவதாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொழில் பாதுகாப்பை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். முறைசாரா மயமாக்கல் நிலையான வேலைவாய்ப்புக்கான உத்தரவாதங் களை இல்லாமல் செய்யும். தொழிலாளர்களுக்கு தொழில் ஸ்திரமற்ற ஒரு சூழலை உருவாக்கும். மூன்றாவதாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அளவுகோல்கள் இல்லாத நிலை ஏற்படும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# கிங்டம் திரைப்படம்

# தமிழர் ஆரியர் போரின் நீட்சியே!

பேராசிரியர்
ஆ. அருள் இனியன்



கடந்த ஒருவார காலமாக தமிழ்நாட்டில் பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது. கிங்டம் திரைப்படம். ஆந்திராவின் முன்னனி நடிகர் விஜய் தேவரகொண்டா நடித்த கிங்டம் திரைப்படத்தை கவுதம் நாயுடு திண்ணனூரி என்பவர் இயக்கியுள்ளார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அண்ணன் சீமான் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு முழுவதும் படத்தை திரையிட தடை கோரி நாம் தமிழர் கட்சியினர் போராடி வருகின்றனர். அப்படத்தின் கதை என்ன? என்பது முதலில் சுருக்கமாக பார்ப்போம்.



ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இன்றைய ஆந்திராவின் ஒருப் பகுதியில் கடற்கரையோரம் அமைந்த ஒரு மலை குன்றில் வாழும் பழங்குடி இன மக்களின் மீது ஆங்கிலேய ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. அந்த மக்களின் தலைவன் தன் உயிரைத் தியாகம் செய்து, பெண்கள், குழந்தைகள் சிலரை காப்பாற்றி கப்பலில் அனுப்பி வைக்கிறார். அவர்கள் இன்றைய ஈழத்தில் கரை ஒதுங்கி வாழத் தொடங்குகின்றனர்.

இந்திய விடுதலைக்கு பிறகு அவர்கள் மீண்டும் இந்தியா செல்ல முயற்சிக்கும் பொழுது, இந்திய அரசு அவர்களை ஏற்க மறுக்கிறது. அவர்கள் தங்களின் வாழ்வாதாரத்துக்காக கடத்தல் தொழிலில் ஈடுபடுவதாக கட்சிகள் அமைக்கப் பட்டுள்ளன.




இந்நிலையில் இந்தியாவில் கதாநாயகன் அவரது அண்ணனோடு வாழ்ந்து வருகிறார். கதாநாயகன் செய்யும் கொலையை தான் செய்ததாக பழி ஏற்றுக் கொண்டு, ஊரைவிட்டு ஓடுகிறார் கதாநாயகனின் அண்ணன். அவர் நேராக ஈழத்தில் உள்ள பழங்குடிகள் கூட்டத்தில் இணைகிறார். பல ஆண்டுகளுக்குப்பின் அண்ணனை தேடி கதா நாயன் ஈழம் வருகிறார். கடத்தல் தொழிலில் ஈடுபடும் அண்ணனை மீட்டுக் கொண்டு நாடு திரும்பும் முயற்சியில் கதாநாயகன் ஈடுபடுகிறார். இதுதான் கதை.

இதில் தமிழர்களைப் படக்குழு எப்படி எல்லாம் இழிவுபடுத்துகின்றனர் என்பதை அறிய மிக நுணுக்கமாக அணுக வேண்டும்.

படம் தொடங்கிய இடம் ஆந்திரா என்றால் அவர்கள் ஏன் தெலுங்கு மொழி பேசாமல், தமிழ் மொழி பேசுகின்றனர்? அவர்களை முழுக்க முழுக்க ஈழத்தமிழர்கள் போல சித்தரித்த காரணம் என்ன? கடத்தல் தொழிலில் ஈடுபடும் குழுவின் தலைவர் பெயர் முருகன். முருகனுக்கு துணையாக நிற்கும் கதாநாயகனின் அண்ணன் பெயர் சிவா. ஏன் இவர்களுக்கு தமிழர்களின் அடையாளப் பெயர்களைத் தேர்வு செய்தனர்?

படத்தில் வரும் காட்சியில் ஒரு வசனம் வருகிறது, "அந்த நிலத்தில் கால் வைப்பவர்கள் எல்லாம் அரக்கர்களாக மாறி விடுகின்றனர் " என்று. மேலும், படத்தில் தமிழர்கள் சகோதர சண்டையில் ஈடுபடுவதாக மறைமுகமாக காட்சிப்படுத்தியுள்ளனர். இவற்றின் மூலமாக பார்வையாளர்களுக்கு படக்குழு சொல்லும் தகவல் என்ன?



2013 ஆம் ஆண்டு 'மெட்ராஸ் கபே' என்ற பெயரில் ஜான் ஆப்ரகாம் நடித்த திரைப் படம், 2019 ஆம் ஆண்டு 'ஃபேமிலி மேன்' என்ற பெயரில் சமந்தா நடித்த வெப் சீரிஸ் உள்பட இந்தியா முழுவதும் எடுக்கப்படும் பல திரைப்படங்களில் தமிழர்களை கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்கள், போதைப் பொருள் கடத்துபவர்கள், வன்முறையாளர்கள், அரக்கர்கள் என்று சித்தரிப்பதன் அடிப்படை என்ன? ஏன் இவ்வளவு வன்மத்தை தமிழர்கள் மீது கொண்டு இருக்கிறது இந்திய சினிமா துறை?



அறிவியலுக்கு புறம்பாக வெறும் புராண இதிகாச கதைகளை நம்பி, இன்னும் கோடிக்கணக் கில் வாழும் அறியாமை மனிதர்களை கொண்ட நாடுதான் இன்றைய இந்தியா. ராமாயணம் என்னும் புராண புரட்டை காலம் காலமாக நம்பிக் கொண்டு வாழ்கின்றனர். ராமாயணத்தில், இந்துக்களின் கடவுள் அவதாரம் ராமன் ' கதாநாயகன்' என்றும், தமிழன் ராவணன் ' அரக்கன்' என்றும் அவர்கள் ஆழ்மனதில் மீண்டும் மீண்டும் பதிவுசெய்வதன் வழியாக இவர்கள் சாதிக்க விரும்புவது என்ன? ஒவ்வொரு ஆண்டும் ராமலீலா விழா நடத்தி காங்கிரசு, பாஜக கட்சி பேதம் இன்றி ராவணப் பெரும்பாட்டனை தீ வைத்து எரிப்பதன் நோக்கம் என்ன?

இவற்றை எல்லாம் புரிந்துகொண்டால்தான் இந்திய சினிமா துறை தமிழர்களை தொடர்ந்து இழிவுபடுத்தும் காரணம் புரியும்.

இரண்டாயிரம் ஆண்டுகாலமாக நடந்து வரும் தமிழர் - ஆரியர் போரின் நீட்சியே இவை அனைத்தும். தமிழர்களுக்கு எதிராக இந்தியாவில் உள்ள மற்ற மொழிவழி மக்களை, குறிப்பாக சமசுகிருத மொழியை ஏற்றுக் கொண்ட மக்களை அணி திரட்டுவதன் மூலமாகவும், அவர்களின் ஆழ்மனதில் தமிழர்களை அரக்கர்கள் என்று சித்தரிப்பதன் வழியாகவும் கொஞ்சம் கொஞ்சமாக நம் உரிமைகளை, அதிகாரத்தை , தேசத்தை அழிக்கத் துடிக்கின்றது ஆரிய இந்துத்துவ அதிகார வர்க்கம். இதற்கு துணை நிற்பதே திராவிட கட்சிகள் தான். இதுபோன்ற தமிழர்களை இழிவுபடுத்துகிற திரைப்படங்கள் வரும்பொழுது எல்லாம் திராவிட ஆட்சியாளர்கள் கள்ளமவுனம் சாதிக்கின்றனர்.

உலகத்திற்கு நாகரிகம், பண்பாடு, அறிவி யல், மருத்துவம், வேளாண்மை என அனைத்தையும் கற்பித்த ஓர் அறிவார்ந்த தமிழ்த் தேசிய இனத்தை காட்டுமிராண்டிகள், கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள் என்று தொடர்ந்து பரப்புரை செய்வது முழுக்க முழுக்க திட்டமிட்ட சதி. இதை உலகத் தமிழர்கள் புரிந்து கொண்டு, இனத்தின் இருப்பை உறுதி செய்யும் பொருட்டு களம் காண வேண்டிய நேரமிது என்பதை உணர்க!

*"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்...!
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே...!"*

• • •



# உணவை ஆயுதமாகப் பயன்படுத்தி மக்களைக் கொல்பவர்கள்

# நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்

தமிழில்: **ஜெயந்திரன்**

கடந்த ஜூன் மாதம் 6ம் திகதி, காஸா மனிதநேய அமைப்பினால் நடத்தப்படுகின்ற விநியோக மையத்துக்கு முதல் தடவையாக நான் சென்றிருந்தேன். எனது நண்பர்கள் சிலருடன் அந்த விநியோக மையத்தை நான் நடந்தே சென்றேன். எனது குடும்பத்துக்கு ஓரளவு உணவு கிடைக்கும் என்ற ஒரு சிறு நம்பிக்கையுடன் அங்கு நான் சென்றிருந்தேன்.

குறிப்பிட்ட அமைப்பைச் சார்ந்த கனரக வாகனங்களுடன், இஸ்ரேலிய இராணுவ வாகனங்களும் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. உணவுக்காக அந்த இடத்துக்கு வந்து கொண்டிருந்த பாலஸ்தீனப் பொதுமக்களை நோக்கி, தங்களது துப்பாக்கிகளை நீட்டியவாறு, ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் அங்கே நிலமட்டத்தை விட உயரமான இடங்களில் நின்றுகொண்டிருந்தார்கள்.



ஒரு கட்டத்தில், இரண்டு ட்ரக் வண்டிகள் அங்கே வந்து, தாங்கள் கொண்டு வந்த உணவை நிலத்தில் போட்டார்கள். அந்த உணவுக்கு அருகாக வரமுயற்சித்தவர்களை இஸ்ரேலிய இராணுவத்தினரின் துப்பாக்கிகள் பதம் பார்த்தன. "இப்போது நீங்கள் வந்து உணவை எடுத்துச் செல்லலாம்" என்று ஒரு இராணுவ வீரன் ஒலிபெருக்கியில் அறிவிக்கவும் மக்கள் முண்டியடித்துக்கொண்டு உணவுப்பெட்டிகள் இருந்த இடத்தை நோக்கி ஓடினார்கள்.

ஆண்கள் மற்றவர்களை இடித்துக்கொண்டு முன்சென்றார்கள். பெண்களோபயத்தாலும்களைப்பாலும் நடுங்கிக்கொண்டிருந்தார்கள். அங்கே வந்தவர்களில் மிகவும் சிறு எண்ணிக்கையானவர்களே உணவை எடுத்துச் செல்லக் கூடியதாக இருந்தது. இன்னும் ஒரு சாரார் உணவை எடுத்தவர்களிடமிருந்து அதனைப் பறிக்க முயன்றார்கள். அங்கு வந்த என்னைப் போன்ற பெரும்பான்மையானோர் எந்தவொரு உணவு மின்றி வெறுங்கை யுடன் வீடு திரும்பினோம்.

சிறு உணவுத்துகள்களுக்காக எமது மாண்பை நாங்கள் விலைபேசுவதாகவே நான் அந்த நேரத்தில் நினைத்தேன். வேண்டுமென்றே எம்மேல் சுமத்தப்பட்ட அவமானமாகவே அது அமைந்திருந்தது. கல்விகற்ற எங்கள் சமூகத்தின் விழிப்புணர்வு மாற்றமடைந்து இப்போது சிதைந்த ஒரு சமூகமாக நாங்கள் மாறத்தொடங்கினோம்.

மேலும் இரண்டு தடவைகள் அந்த அமைப்பின் உணவு விநியோக மையத்துக்கு நான் சென்றிருந்தேன்.

இனவழிப்புப் போருக்கு முன்னர், கான் யூனிசுக்குக் கிழக்கே, ஒரு சிறுவர் இல்லத்தில் காவலாளியாக அவன் பணியாற்றிக் கொண்டிருந்தான். காவல் கடமையை விட அதிகமாக அவன் அங்கு பணியாற்றினான். அங்குள்ள பிள்ளைகளை அவன் நேசித்தான். அவர்களது நாளாந்த தேவைகளில் அவர்களுக்கு அவன் உதவினான். பாதுகாப்புணர்வை அவர்கள் அனுபவிக்க அவன் அவர்களுக்கு உறுதுணையாக விருந்தான். அவனது வாழ்க்கை அழிக்கப்பட்டதன் பின்னர் தனது குடும்பத்தினருக்கு ஆதரவளிப்பதிலும் தனது உறவினர்களின் பிள்ளைகளைப் பராமரிப்பதிலும் தனது நேரத்தை அவன் செலவிட்டான்.



உச்சியில் இருந்து உள்ளங்கால்வரை தூசி படிந்த நிலையில் அவனை அடிக்கடி நான் காண்பேன். முற்று முழுதாகக் களைத்துப் போயிருந்த நிலையிலும், உணவு எதையுமே பெறாத சந்தர்ப்பங்களிலும் கூட என்னைக் காணும் போதெல்லாம் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுச் செல்வான்.

ஜூலை மாதம் 19ம் திகதி, நாடரும் 16 வயது நிரம்பிய எனது ஒன்றுவிட்ட சகோதரன் காலித்தும் உணவு விநியோக மையத்துக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அந்த செயற்பாட்டில் முற்று முழுதாக நம்பிக்கை இழந்த நிலையில் அங்கு செல்வதில்லை என்று நான் முடிவுசெய்திருந்தேன். மனிதநேயப் பணி என்ற கொடியின் கீழ் காஸா வாழ் மக்களைக் கொல்வதற்காக வைக்கப்பட்ட ஒரு பொறியாகவே அதனை நான் பார்த்தேன்.



உணவைப் பெற்றுக்கொள்வதற்காக நேரத்தோடே தாங்கள் அங்கு போய்விடுவோம் என்று அவர்கள் எனக்குச் சொன்னார்கள். நாடர் திரும்பி வரவில்லை. காலித் காலில் காயத்துடன் வீடு திரும்பினான்.

இஸ்ரேலிய படைகள் உணவுக்காக அங்கு சென்றிருந்த மக்கள் மீது சுடத்தொடங்கியது மட்டுமன்றி, பல எறிகணைகளையும் அவர்கள் மீது ஏவினார்கள். உணவுக்காக முன்வரிசையில் நின்றவர்களே அதிகமாகப் பலியானார்கள். மூன்று துப்பாக்கிச் சன்னங்கள் நாடரின் உடலைப் பதம் பார்த்திருந்தன. மார்பிலே ஒன்று, வயிற்றிலே ஒன்று. காலிலே ஒன்று. அது மட்டுமன்றி அவனருக்கருகில் வெடித்த ஒரு எறிகணையின் துகள்களும் அவனது உடலில் பாய்ந்திருந்தன.

நாடரின் கொலை அவனது குடும்பத்தை நிலைகுலைய வைத்தது. அவன் தான் அந்த குடும்பத்தைப் பராமரித்துக்கொண்டிருந்தான். தங்கள் துயரத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வார்த்தைகள் எதுவும் இருக்கவில்லை. அவர்கள் கண்களில் இருந்த பனித்த கண்ணீர் உயிரற்ற அவனது உடலை நனைத்துக்கொண்டிருந்தன.

விநியோக மையங்களில் கொலை செய்யப்பட்ட 1500 பேரில் நாடரின் பெயரும் சேர்க்கப்பட்டது. உலகைப் பொறுத்தவரையில் அவன் ஒரு எண் மட்டுமே. என்னைப் பொறுத்தவரையில் யாருக்குமே தீங்கிழைக்காமல், எவருக்கும் உதவிசெய்யும் ஒருவனாக அவன் இருந்தான். அவனிடமிருந்த அத்தனையும் அவனிடமிருந்து பறிக்கப்பட்டன. அவனது தொழில், அவனது வீடு, வெவ்வேறு இடங்களுக்குப் பயணம் செய்து காணொளி எடுத்து அவற்றைத் தொகுக்க வேண்டும் என்று அவன் வளர்த்து வந்த கனவு என்று அனைத்துமே அவனிடமிருந்து பறிக்கப்பட்டன. அவனது குடும்பமோ இப்போது பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கிறது.



இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜிஎச்எவ் (GHF) என்ற இந்த நிறுவனம் காஸாவில் இயங்கத் தொடங்கியதில் இருந்து, முன்னணி மனிதநேய அமைப்புகள் அனைத்துமே அந்த அமைப்பையும் அவை விநியோகம் செய்யும் முறையையும் கண்டனம் செய்திருக்கின்றன.

"இது உதவியல்ல. திட்டமிடப்பட்ட கொலை" என்று எல்லைகள் அற்ற வைத்தியர்கள் என்ற அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. அப்பாவிப் பொதுமக்கள் வேண்டுமென்றே இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பதற்கான மருத்துவ ஆதாரங்களையும் அந்த அமைப்பு வெளியிட்டிருந்தது. "மரணப்பொறிகள்" என்று ஜிஎச்எவ் அமைப்பின் உணவு விநியோக மையங்களை அவர்கள் விவரித்திருந்தார்கள்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

கட்டுரை



# அலாஸ்கா பேச்சும் – ஐரோப்பாவின் எதிர்காலத்தை மாற்றப்போகும் போரும்


வேல்ஸில் இருந்து அருஸ்


ரஸ்ய அதிபர் விளாதிமிர் புடினுக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கும் இடையிலான சந்திப்பு இந்த பத்தி எழுதப்படும் போது, அதாவது வெள்ளிக்கிழமை (15), ரஸ்யாவின் முன்னாள் பிரதேசமான அலாஸ்காவில் இடம்பெறும் ஆயத்தங்கள் நடந்து வருகின்றன.




அமெரிக்காவின் சிறப்புத் தூதுவர் ஸ்ரீவ் வெர்கோபின் பயணத்தின் பின்னர், இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உக்ரைன்-ரஸ்யப் போரை 24 மணிநேரத்தில் நிறுத்துவேன் என்று தெரிவித்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பின்னர் அதற்கு 100 நாட்கள் காலக்கெடுவும், பின்னர் 50 நாட்கள் காலக்கெடுவும் விதித்திருந்தார். எனினும், அந்த காலக்கெடு அவர் பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்ட சமயம் 10 நாட்களாகக் குறைக்கப்பட்டது. அந்த 10 நாள் காலக்கெடு வெள்ளிக்கிழமையுடன் முடிவடையும் நிலையில், இந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன.

அமெரிக்க-ரஸ்ய பேச்சுவார்த்தையில், இந்த சண்டையில் ஈடுபடும் முக்கிய தரப்பான உக்ரைனும், அதற்கு ஆயுதத் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளைப் பெருமளவில் வழங்கி வரும் ஐரோப்பிய ஒன்றியமும் புறக்கணிக்கப் பட்டுள்ளன.



எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தங்களைத் தொடர்ந்து, கடந்த புதன்கிழமை (13) ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உக்ரைனுடனான காணொளி பேச்சுவார்த்தைகளை ட்ரம்ப் மேற் கொண்டிருந்தார். அதற்காக, உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி ஜெர்மன் தலைநகர் பேர்லினுக்குச் சென்றிருந்தார். இந்த பேச்சுவார்த்தைகளில் ட்ரம்ப், ஜெர்மன் அதிபர், பிரித்தானியா பிரதமர், இத்தாலி பிரதமர், பிரான்ஸ் அதிபர் மற்றும் உக்ரைன் அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது, உக் ரைன் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் சேர்க் கப்பட வேண்டும் எனவும், அதற்குப் பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஐரோப்பியத் தலைவர்கள் கோரினர். இந்தக் கூட்டத்தின் பின்னர், 31 நாடுகளைக் கொண்ட உக்ரைன் போருக்கு ஆதரவு வழங்கும் கூட்டணி ஒன்று ஐரோப்பிய நாடுகளால் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தமது நோக்கம் உக்ரைனில் போர் நிறுத்தம் ஏற்படுத்துவதே என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். புடினுடனான சந்திப்பின் பின்னர், செலன்ஸ்கி மற்றும் ஐரோப்பியத் தலைவர்களைச் சந்திப்பதற்கும் ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ளார்.



அதேசமயம், இந்தப் பேச்சுவார்த்தை களைக் குழப்பும் முயற்சிகளைத் தடுப்பதற்காக, அமெரிக்காவின் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். பிரிட்டனின் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்த அவர், இந்தப் போரில் உக்ரைன் வெற்றி பெற முடியாது என்பதை வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். எனவே, யதார்த்தத்தை மட்டுமே நடைமுறைப்படுத்த முனைகிறேன் என்று அவர் கூறியதுடன், ஜெர்மனியில் உள்ள அமெரிக்கப் படைத்தளத்திற்கு விஜயம் மேற்கொண்ட அவர், ஐரோப்பாவில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், உக்ரைனுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்கி போரைத் தொடரும் முயற்சிகளை ஐரோப்பிய நாடுகள் கைவிட வேண்டும் என்று அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைத் தலைவரான ஸ்டீபன் பிரையன் தெரிவித்துள்ளார். உக்ரைனுக்கு வழங்கப்படும் உதவிகளால் அங்கு மாற்றம் ஏற்படப்போவதில்லை; மாறாக, இரு தரப்பினரும் தமக்கான சவக்குழிகளைத் தாமே வெட்டுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

எனினும், உக்ரைன் தொடர்பான கடும் அறிக்கையை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், ரஸ்யாவைக் கடுமையாக நடத்த வேண்டும் என்று அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படாவிட்டால், ரஸ்யா கடுமையாகத் தண்டிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.




ஆனால், ஜூன் 2024-ல் பூட்டீன் விதித்த நிபந்தனைகளில் எந்த மாற்றமும் இல்லை என்று ரஸ்யாவின் வெளியுறவு அமைச்சகப் பேச்சாளர் அலெக்ஸி பெட்ரோவ் கடந்த புதன்கிழமை (13) தெரிவித்துள்ளார். அதாவது, உக்ரைன் படையினர் டொனெட்ஸ்க், லுகான்ஸ்க், கேர்சன் மற்றும் சாபோரிஸ்சியா ஆகிய நான்கு பகுதிகளிலிருந்து விலக வேண்டும்; மேலும் நேட்டோவில் இணையக் கூடாது, உக்ரைனின் ஆயுதங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதே புடினின் நிபந்தனைகள்.



உக்ரைனின் 19% பகுதிகளை ரஸ்யா தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மேலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும், ரஸ்யா தனது போரை நிறுத்தவில்லை. உக்ரைன் படையினர் தமது முன்னணி நிலைகளைத் தொடர்ந்து இழந்து


தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## விடுதலைப் ... தொடர்ச்சி ...

நேரம் மூச்சுவிடாமற் பேசியும் பயனில்லை. தற்போது நாடாளுமன்றத்தில், திரைப்படப் பாணியில் 14 நிமிடங்கள் அங்கிங்குமாய்க் காலை, கையை உயர்த்தி, முதுகை வளைத்து, கண்ணை உருட்டி, சொண்டைப் பிதுக்கிப் பேசியும் எந்தப் பயனுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தமக்கான மக்கள் ஆதரவை உள்ளும் புறமும் நிரூபிப்பது சரி. ஆனால், நாடாளுமன்றத்தில் பேச்சுப் போட்டி நடத்தி எதனையும் சாதிக்க முடியாது. மாறாக, நாடாளுமன்றத்தை உள்ளும் புறமும் போர்க்களமாக மாற்றவல்ல திட்டங்களையும், வியூகங்களையும் வகுத்து, அதற்கூடாகப் போராட்டத்தை நாடாளுமன்றத்துக்குள்ளும், புறமும், உலக அரங்கிலும் எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான வியூகங்கள் வகுக்கப் பல வழிகளுண்டு. இதற்கான வியூகங்களைப் பின்பொரு தனிக் கட்டுரையில் ஆராய்வோம்.

**இப்போது, போராட்டத்துக்கான முதற் திட்டத்தை வரையறை செய்வோம்:**

**1. ஆயுதப் போராட்டத்திலிருந்து மக்கள் போராட்டத்துக்கு:**

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, உள்ளும் புறமும் தடை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை, இந்தியா தவிர, மேலும் 31 நாடுகளில் அந்தத் தடைப் பட்டியல் நீள்கிறது. ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே உள்ளும் புறமும் இடமில்லை. ஆனால், "இனப்படுகொலைக்கெதிரான குரலை" மனிதநேயத்தின் அடிப்படையில் உலகெங்கும் முன்னெடுக்க முடியும்.

- அதனைத் தமிழகத்திலும் முன்னெடுக்கலாம்.
- முழு இந்தியாவிலும் முன்னெடுக்கலாம்.
- அமெரிக்காவிலும் முன்னெடுக்கலாம்.
- ஐரோப்பாக்கண்டம் முழுவதிலும் முன்னெடுக்கலாம்.
- **உலகின் ஏனைய நாடுகளிலும் முன்னெடுக்கலாம்.**

இது எதிரிக்கும், தமிழர் உரிமைகளை எதிர்க் கவல்ல வேறு சக்திகளுக்கும் எதிரான ஒரு பலம் வாய்ந்த ஆயுதம். செம்மணிப் புதைகுழியும் இதற்கு அரணமாகிறது. குறிப்பாக, 1958 ஆம் ஆண்டிலிருந்து கறுப்பு யூலை வரையும், அதன் பின்பும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அனைத்து மனிதப் படுகொலைகளும் தொடர்பான நீதி நிர்வாக நடவடிக்கைகளும் இவற்றுக்கு அணிசேர்க்கின்றன.

**2. போராட்ட முன்னுரிமைகள்:**

முதலாவதாக,

- **முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை**
- **இசைப்பிரியா மீதான பாலியல் வன்முறை, படுகொலை**
- **சிறுவன் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை**

என்பனவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி, அதற்கான போராட்டத்தை உள்நாட்டு அரங்கிலும், தமிழகத்திலும், இந்தியாவிலும், உலக அரங்கிலும் முன்னெடுக்க வேண்டும்.

**3. பொது செயற்குழு அமைப்பு:**

இதற்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தளமாகக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்ச்சமூகம் ஒன்றுதிரண்டு, நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி கோரிப் போராடுவதற்கான ஒரு "பொது செயற்குழு"வை உருவாக்க வேண்டும்.

- **இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குவகிக்கலாம்.**
- **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் பங்குவகிக்கலாம்.**
- **சிவில் சமூக உறுப்பினர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், மூத்த குடிமக்கள் உள்ளடக்கிய 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு "செயல் குழு"வை உருவாக்கி, பிரச்சினையைக் கையாளுவதற்கு அதற்கு அனைத்து அதிகாரங்களையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும்.**
- **உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதுவே தமிழ் மக்களால் உள்ளும் புறமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும்.**
- **அதுவே எம்மத்தியில் ஏற்பட்டுள்ள உள் உடைவுகளைச் சரிசெய்வதற்கும், புதிய செயல் பூர்வமான ஒரு பாதையை வடிவமைக்கவும் வழிகோலும்.**

*"An idle mind is the devil's workshop"* ("வெறும் மனம் பிசாசின் பட்டறை") என்பதற்கிணங்க, போராடாது தேங்கி வரண்டு கிடக்கும் ஒரு சமூகத்தின் மனதில் பிசாசுகள் குடிகொண்டு, அதனைத் தங்கள் பட்டறையாக மாற்றிவிடும். இப்போது தமிழினத்தின் அரசியலும் அப்படித்தானுள்ளது.

எனவே, "இனப்படுகொலை" என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி, அதற்காகப் போராடவல்ல ஒரு அமைப்பைச் சனநாயகப் பூர்வமாக வடிவமைத்து, வெற்றிடங்களை நிரப்பிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளும் தமிழரின் தலையில் கொண்டையும் கட்டி, கொண்டையில் பூவும் கட்டி, அதற்கப்பால் தலையில் குருவி கூடும் கட்டிச் செல்லும்.

**உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்களே!**

ஈழத்தமிழ் மண், இந்து மாகடலின் மையத்தில் இந்தியாவின் வாசற்படியாக இருக்கவல்ல, அதன் கேந்திர அமைவிடத்தின் நிமித்தம், அது உலகப் பெரும் வல்லரசுகளையெல்லாம் ஈர்க்கவல்ல புள்ளியிலுள்ளது. சர்வதேச கவனத்தை ஈர்க்கக்கூடிய புள்ளியிலுள்ளதால், அதனை ஒரு முதலீடாகக் கொண்டு, அறிவாற்றலுடனும், ஆளுமைத் திறனுடனும் தமிழ்த் தலைவர்கள் செயல்பட வேண்டும்.

• • •

## உணவை ஆயுத ... தொடர்ச்சி ...

அதற்கு ஒரு வாரத்துக்கு முதல், "அங்கு நடைபெறுவது ஒரு போர்க்குற்றம் என்று மனித உரிமைக் கண்காணிப்பகம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. எந்தவொரு நியாயமுமின்றி பாலஸ்தீனப் பொதுமக்களை திட்டமிட்ட முறையில் சுட்டுக்கொல்வது பன்னாட்டு மனித நேயச் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயல் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்திருந்தது.

உதவி விநியோகம் இரத்த ஆறை ஓடச்செய்திருக்கிறது என்று அந்த அமைப்பு குறிப்பிட்டிருந்தது.

ஜிஎச்எவ் அமைப்பின் தலைமைத்துவம் நடக்கின்ற அட்டூழியங்களை மறுப்பது அந்த அமைப்பின் குற்றங்களை மேலும் மோசமாக்குகிறது. ஆக்கிரமிப்பாளரின் பார்வையையே அவர்களும் பிரதிபலிக்கிறார்கள். 'பசியினால் சிறுபிள்ளைகள் தொடர்ந்து இறந்துகொண்டிருக்கிறார்கள்' என்ற மருத்துவ அறிக் கைகள் அனைத்தையும் புறந்தள்ளி அந்த அமைப்பின் அதிபரான ஜொணி மூர் காஸாவில் பட்டினி எதுவும் இல்லை என்று சொன்னார். உதவிகளைக் களவாடுவதாக ஹமாசின் மேல் அவர் குற்றம் சுமத்தினார். தற்போதைய நிலைமையை ஹமாசின் பொய்ப்பிரச்சாரம் என்று அவர் பெயரிட்டார்.

ஹமாஸ் வேண்டுமென்றே பாலஸ்தீன மக்களைத் தாக்கிவிட்டு பழியை இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மீது சுமத்துவதாக ஒரு விநோதமான குற்றத்தை அவர் சுமத்தினார். ஆனால் உண்மையான களநிலைமையை நேரில் பார்த்தவன் என்ற வகையில், ஜிஎச்எவ் மையங்களில் துப்பாக்கிகளுடன் நிற்பவர்களே கூலிக்கு அமர்த்தப்பட்ட கொலையாளிகள் என்பதும் ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும். அங்கு வருபவர்களோ கொடும் பசியால் எலும்பும் தோலுமாக இருக்கின்ற பாலஸ்தீன அப்பாவிப் பொதுமக்கள் ஆவர்.

காஸாத்துண்டுக்கு அப்பாலும் ஜிஎச்எவ் அமைப்பின் தொடர் செயற்பாடுகள் பாதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இந்த அமைப்பின் செயற்பாடுகளைக் கண்டிக்காது அவர்களது செயற்பாடுகளை அங்கீகரிப்பது மனித நேயமையங்களை கொலைக்களங்களாக மாற்றுவதற்குச் சமனாகும்.

எனது நண்பன் நாடரின் சாவு பயனற்றுப்போகக்கூடாது என்பதே எனது விருப்பம். அவனது சாவுக்குக் காரணமான ஒவ் வொருவரும், ஜிஎச்எவ்வினூடாக உதவிகள் விநியோகிக்கப்படுவதற்கு காரணமானவர்கள் அல்லது அதற்கு நிதி வழங்கியவர்கள் அல்லது அதற்கு மனிதநேயப் போர்வையைக் கொடுத்தவர்கள் இவர்கள் அனைவருமே தண்டிக்கப்படவேண்டியவர்கள். இந்தச் செயற்பாடுகளை நிறுத்துவது மட்டும் போதாது. மனித நேய உதவிகளை ஒரு பொறியாகப் பயன்படுத்தியவர்கள், பசியை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வதற்குக் காரணமாக இருந்த அனைவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறானகுற்றங்களைப்பார்த்தும்பேசாமல் இருப்பது அந்த குற்றங்களுக்குத் துணையாக இருப்பதற்குச் சமன். இன்றைய மௌனம் நாளை இந்தக் குற்றங்கள் மீண்டும் நடைபெறுவதற்குக் காரணமாக அமையப்போகிறது.

**நன்றி: அல்ஜஸீரா**

## அமெரிக்க - ரஸ்ய ... தொடர்ச்சி ...

அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்துகிறார் என்று உக்ரைனின் நட்பு நாடுகள் கவலைப்படுகின்றன.

ட்ரம்பின் சமீபத்திய அணுகுமுறை மாற்றத்தில், அவரது ரியல் எஸ்டேட் வணிக கூட்டாளியான விட்காஃப் முக்கிய பங்கு வகித்துள்ளார். விட்காஃப் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையே ஒரு பெரிய ஒப்பந்தத்தை ஆதரிக்கிறார். பேச்சுவார்த்தைகளில் அவர் ஈடுபடுவது பொதுவாக உக்ரைனுக்கு தீங்கு விளைவிக்கும். எப்படியோ, ரஷ்யா தனது வசம் வைத்திருக்கும் பிரதேசங்களின் மீதான கட்டுப்பாட்டை அங்கீகரிப்பது குறித்த விவாதம், ரஷ்யாவிடம் இன்னும் அதிகமான பிரதேசங்களை ஒப்படைப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டு ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரேனிய துருப்புகள் இருந்தது முதல், நிலப்பரிமாற்றக் கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது, உக்ரைன் குர்ஸ்க் பிராந்தியத்திலிருந்து கிட்டத்தட்ட முற்றிலுமாக வெளியேற்றப்பட்டதால், இந்த திட்டம் சர்ச்சைக் குரியதாக மாறியுள்ளது.

இருப்பினும், பரிமாற்றக் கருத்து வாஷிங்டனில் தொடர்ந்து வாழ்வதாகத் தெரிகிறது. சமீபத்திய உக்ரேனிய திட்டங்களில் ஒரு தெளிவானநிபந்தனைஇருப்பதாகவட்டாரங்கள் கூறுகின்றன. பிராந்திய சலுகைகள் குறித்த எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் முன்னதாக முழுமையான போர்நிறுத்தம் இருக்க வேண்டும் என்பதே அது. ஆனால், உக்ரைனை அதன் சொந்த பிரதேசத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கிய ஒரு எதிர்த்திட்டத்தை முன்வைக்க அழைப்பு விடுக்கும் அமெரிக்கர்களுக்கு இது போதாது," என்று திஎகனாமிஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## அலாஸ்கா பேச்சு ... தொடர்ச்சி ...

வருகின்றனர். தொடர்ந்து போரிடுவதற்கான ஆள்பலமும் அவர்களிடம் தற்போது இல்லை. கடந்த ஆண்டு ஆகஸ்டில் ரஸ்யாவின் கெர்க்சன் பகுதியைக் கைப்பற்றிய உக்ரைன் தனது பலத்தை உலகிற்குக் காட்ட முயன்றது. எனினும், ரஸ்யாவின் பதில்தாக்குதலில் உக்ரைன் ஏறத்தாழ 76,000 படையினரை இழந்ததுடன், கெர்க்சன் பகுதியை முழுமையாக இழந்தது.

ஐரோப்பிய நாடுகளில் பயிற்சி பெற்ற உக்ரைன் படையினரின் முன்னணித் தாக்குதல் பிரிவுகள், கெர்க்சன் பகுதிக்குள் ஈர்க்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டன. இது உக்ரைனின் போரிடும் திறனைக் கடுமையாகப் பாதித்துள்ளது. உக்ரைன் தற்போது ஆளில்லாத தாக்குதல் ட்ரோன்களின் மீதே முழுமையாக நம்பியுள்ளது. ஆனால், அவற்றையும் எதிர்கொள்ளும் திறனை ரஸ்யா படிப்படியாக வளர்த்து வருகிறது.

கடந்த மாதம் 21-ந் தேதி, உக்ரைனின் மத்திய பகுதியான குறோபிநிஸ்கியில் உள்ள நேட்டோ படையினரின் தளத்தின் மீது ரஸ்யா கின்சால் ஏவுகணைத்தாக்குதலை நடத்தியதில், 115 நேட்டோ படையினர் கொல்லப்பட்டனர் என்று தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத ஒரு அமெரிக்கப் படையினர் நியூயார்க் டைம்ஸ் நாளேட்டுக்குத் தெரிவித்துள்ளார். களத்தில் முன்னிலை வகிக்கும் ரஸ்யா, உக்ரைன் தன் நிபந்தனைகளை ஏற்கும் வரை போரை நிறுத்த விரும்பாது என்பதே பலரின் கருத்து. தற்போது பலமான நிலையில் உள்ள ரஸ்யா, டிரம்பின் மிரட்டல்களுக்கு அடிபணியும் நிலையில் இல்லை.

இந்தப் போர் தொடர்ந்தால், உக்ரைன் முழுவதுமாக இழக்க நேரிடலாம் என்பது அமெரிக்காவின் கவலை. ஆனால், உக்ரைனைப் பலியிட்டாவது ரஸ்யாவைப் பலவீனப்படுத்தி தம் நலன்களை அடைய வேண்டும் என்பது ஐரோப்பாவின் திட்டம். இந்தப் போர் மூன்றாம் ஆண்டை நோக்கிப் பயணிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் இழப்புகளைச் சந்தித்தாலும், ரஸ்யா ஒரு முழுமையான போருக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டுள்ளது. இதுவரை, நீண்ட போர்கள் மூலம் அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் மட்டுமே இத்தகைய அனுபவத்தைக் கொண்டிருந்தன.

தற்போது, உக்ரைன் முன்னணியில் ரஸ்யா, பெலாரஸ், செச்சென்யா, சீனா மற்றும் வடகொரியாவின் படையினரும் போர் அனுபவம் பெற்று வருகின்றனர். இந்த மாற்றம், வருங்காலத்தில் நேட்டோவின் ஆதிக்கத்திற்குக் கடுமையான சவால்களை ஏற்படுத்தும் என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது.

அதேசமயம், உக்ரைன் மீதான பொருளாதாரத்தடைகள் ரஸ்யாவின் பொருளாதாரத்தைப் பாதித்தாலும், மேலும் சில ஆண்டுகளுக்கு ரஸ்யா தாக்குப் பிடிக்கும் நிலையில் உள்ளது. ஆனால், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா தங்கள் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஐரோப்பா அல்லது அமெரிக்கா போரைத் தொடர விரும்பினாலும், அதை நீடிக்க முடியாது என்பதை டிரம்பின் முயற்சி வெளிப்படுத்துகிறது. ஆனால், இது தோல்வியடைந்தால், ஐரோப்பா ஒரு முழுமையான போருக்குள் இழுக்கப்படும். அது ஐரோப்பாவின் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் போராக இருக்கும்.

• • •






## செயற்கை நுண்ண ... தொடர்ச்சி ...

மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் குழு, AI ஆண்டிபயாடிக் கண்டுபிடிப்பில் "இரண்டாவது பொற்காலத்தை" தொடங்கக்கூடும் என்று கூறுகிறது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பாக்டீரியாவைக் கொல்லும், ஆனால் சிகிச்சையை எதிர்க்கும் தொற்றுகள் இப்போது ஆண்டுக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான இறப்புகளை ஏற்படுத்துகின்றன.

நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்துவது, மருந்துகளின் விளைவுகளைத் தவிர்க்க பாக்டீரியாக்கள் உருவாக உதவியுள்ளது, மேலும் பல தசாப்தங்களாக புதிய நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பற்றாக்குறை உள்ளது.

புதிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளாக மாறக் கூடிய சாத்தியக்கூறுகளைக் கண்டறியும் முயற்சியில், ஆயிரக்கணக்கான அறியப்பட்ட இரசாயனங்களை ஆராய, ஆராய்ச்சியாளர்கள் முன்பு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தியுள்ளனர்.

இப்போது, ஒரு படி மேலே சென்று, பாலியல் ரீதியாக பரவும் கோனோரியா தொற்று மற்றும் ஆபத்தான MRSA ஆகியவற்றிற்கு முதலில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை வடிவமைக்க, ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தியுள்ளது.

செல் இதழில் வெளியிடப்பட்ட அவர்களின் ஆய்வு, இல்லாத அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாத மருந்துகள் உட்பட 36 மில்லியன் மருந்துகளை ஆய்வுக்குட்படுத்தியுள்ளது.

## ஐநா மனித உரி . .. தொடர்ச்சி ...

குறிப்பிட்டுள்ளார்.

அரசுத் தரப்பு என்பது, ஒரு நாட்டின் அரசால் இயக்கப்படும் பாதுகாப்புப் படைகள், அமைச்சர்கள், நிர்வாக அதிகாரங்களை கொண்ட நாட்டின் அரசையே குறிக்கிறது.

விடுதலைப்புலிகள் என்பது, சுயநிர்ணய உரிமைக்காக போராடிய ஒரு விடுதலை இயக்கம். இனப்படுகொலை செய்தவர் கள் இலங்கை அரசின் இராணுவமும் படைத் துறையும். இவர்களே இனப்படு கொலை செய்தவர்கள் என்பதற்கான சாட்சியங்களாக, அடையாளங்களாக, செம்மணி தமிழினப்படு கொலை எலும்புக்கூடுகள் சான்றாக உள்ளன.

இதனை நேரில் பார்த்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், சர்வதேச பொறிமுறையூடாகவே நீதி கிடைக்கும் என்பதை அறிக்கையில் அழுத்தமாக குறிப்பிடாமல், "பழைய பானையில் புதிய கள்ளை விடுவது" போன்றே இந்த அறிக்கை உள்ளது.

இதனை முழுமையாக ஈழத்தமிழர்களும் உலகத் தமிழர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மை.

## ஊடகவியலாளர் . .. தொடர்ச்சி ...

இந்த அழைப்பாணை, குமணனின் செய்தி வெளியீடுகளுக்கு எதிரான ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என்றே கருதப்படுகிறது. எனவே, இலங்கை அரசாங்கம் அவர்மீதான துன்புறுத்தல்களை உடனடியாக நிறுத்தி, நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

## தமிழர்கள்மீதான ... தொடர்ச்சி ...

படுகொலையின் கனத்த நினைவுகளைச் சுமந்தவர்களாக இருக்கின்றோம்.

ஏற்கனவே நாம் குறித்த விமானத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் அஞ்சலிகளைச் செலுத்திய பின்னரே இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றுள்ளோம். உலகில் மிகக் கொடூரமான தாக்குதல்களையும், படுகொலைகளையும் மேற்கொண்ட இராணுவங்களில் இலங்கை இராணுவமும் ஒன்றாகும்.

வெள்ளைச் சீருடையுடன் கல்வி கற்கச் சென்ற எமது பிள்ளைகளின் மீது விமானம் குண்டுமழை பொழிந்தது. எமது பிள்ளைகளின் வெள்ளைச் சீருடைகள் குருதியால் நனைந்து சிவப்பு சீருடைகளாக மாறியிருந்த கோலம், உடல்கள் சிதறிக்கிடந்த நிலை — இத்தகைய கொடூரமான சம்பவத்தை யாரும் மறந்துவிட முடியாது.

இந்த கொடூரம் இடம்பெற்று 19 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் கதறி அழுதபடி தமது சோகத்தை வெளிப்படுத்தும் போது, இந்தப் படுகொலை இன்னும் எவ்வளவு ஆழமாக மனங்களில் தாக்கத்தைச் செலுத்தி இருக்கின்ற தென்பதை உணர முடிகிறது. இது என்றுமே மறக்க முடியாத ஆறாத வலியாகும்.

இலங்கை இராணுவம் கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் வருடம் முழுவதும் தமிழினப் படுகொலையை மேற்கொண்டது. அவ்வாறு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தமிழினப்படுகொலைக்கான சான்றுகள், ஆதாரங்கள் தற்போது தாயகப் பரப்பின் பல்வேறு இடங்களில் இருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எமக்கான விடிவு கிடைக்கவேண்டும் என்ற நோக்குடனும், தமிழ்த்தேசிய இனமான நாங்கள் எம்மை நாமே ஆட்சி செய்யவேண்டும் என்ற நோக்குடனும், எமது தமிழர் தாயகத்தை வழிநடத்திக் கொண்டிருந்த எமது தலைவரின் விடுதலைப் போராட்டக் கட்டமைப்பை, உலக நாடுகள் இணைந்து அழித்த வரலாறு அனைவருக்கும் தெரியும்.

தற்போது தமிழர்கள் நாங்கள் நலிவடைந்தவர்களாகவும், அடிமைகளாகவும் காணப்படுகின்றோம். தமிழர் தாயகத்தில், தமிழர்களுக்கே எதுவுமில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. கடலில் தொழில் செய்ய முடியாத நிலை, ஆறு மற்றும் குளங்களில் தொழில் செய்ய முடியாத நிலை, வயலில் தொழில் செய்ய முடியாத நிலை — இவ்வாறு எமது தமிழ் மக்கள் தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முடக்கப்பட்டுள்ளனர்.

எமது தமிழ்மக்களின் காணிகள் திட்டமிட்ட வகையில் அபகரிக்கப்படுகின்றன. நிலமில்லையேல் எமக்கு எதுவுமில்லை. குறிப்பாக வனவளத் திணைக்களத்திடம் தற்போது 4,32,486 ஏக்கர் காணிகள் உள்ளன. ஆனால் விடுதலைப்புலிகளின் காலத்தில் 2,22,006 ஏக்கர் நிலங்களே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த நிலையில், 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலங்களை வனவளத் திணைக்களம் அபகரித்துவைத்துள்ளது.

இவ்வாறு அரசுத் திணைக்களங்களால் எமது தமிழ்மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முடக்கப்பட்ட நிலையில், எமது மக்கள் பெருமளவில் தாயகப்பரப்பிலிருந்து புலம்பெயர்ந்து செல்கின்றனர். இதன் விளைவாக தாயகப்பரப்பில் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

கடந்த காலங்களில் இலங்கை அரசால் தமிழ் இன அழிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது தாயகப்பரப்பிலுள்ள எமது தமிழ்த் தேசிய இனத்தின்மீது கட்டமைக்கப்பட்ட இன வழிப்புச் செயல்பாடுகளை இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

கடந்த கால அரசாங்கங்கள் மிக அதிக அளவில் ஆக்கிரமிப்புகளையும், அபகரிப்புச் செயல்பாடுகளையும் தீவிரமாக மேற்கொண்டிருந்தன. தற்போதைய அரசும் அந்த நிலையிலிருந்து மாறுபட்டதாகத் தெரியவில்லை. எமது மக்களின் அபகரிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படும் எனக் கூறினாலும், நடைமுறையில் விடுவிக்கப்படுவதில்லை.

அந்தவகையில், இன்று நாம் செஞ்சோலைப் படுகொலையில் உயிரிழந்தவர்களை அஞ்சலிப்பதற்காக கூடியிருக்கின்றோம். இத்தகைய படுகொலைகளைச் செய்தவர்களுக்கு இறைவனால் உரிய தீர்ப்பு கிடைக்கும் என நம்புகின்றோம்.

குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷ பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பேற்று, பின்னர் அந்த மக்களாலேயே துரத்தப்பட்ட வரலாற்றையும் நாம் கண்டிருக்கின்றோம்.

எனவே, தமிழ்த்தேசிய இனத்தின்மீது இனவழிப்பை மேற்கொண்டவர்களும், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை மேற்கொள்பவர்களும் அதற்கான பொறுப்புக்கூறலைச் செய்யும் நாள் வரும். உரிய தீர்வும் கிடைக்கும். அதற்காக நாம் அனைவரும் காத்திருப்போம்.

படுகொலைகளின் போதும், எமக்கான விடுதலைக்காக போராடியவர்களுக்கும் தொடர்ந்தும் அஞ்சலிகளைச் செலுத்துவோம். என்றும் அவர்களை நினைவில் கொள்வோம், என்றார்.




## சூழ்ச்சியில் ... தொடர்ச்சி ...

முறைசாரா முறைமைகளின் கீழ் உள்ள தொழில் தருநர்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியதில்லை. இதனால் தொழிலாளர்கள் ஆபத்தான வேலைத்தள சூழலுக்குள் வேலை செய்ய நேரிடும். அவர்களுக்கு ஏற்படும் உபாதைகளுக்கு யாரும் பொறுப் பேற்க வேண்டியதில்லை என்ற நிலை ஏற்படும். 200 ஆண்டுகளுக்கும் அதிக கால மாக நடைமுறையில் இருந்து வருகின்ற ‘செக்ரோல் முறைமையிலிருந்து’ முறைசாரா முறைமைகளுக்கு மாறுவதானது, தொழிலாளர்களின் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இந்நிலையானது பலரை வறுமைக்கும் சுரண்டலுக்கும் தள்ளிவிடுகின்றது.

பெருந்தோட்ட துறையில் முறைசாரா முறைமையை நிறுத்துவதன் ஊடாக பல சாதக விளைவுகள் ஏற்படும். தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும். முறைசாரா மயமாக்கல் அநியாயமானது மட்டுமல்ல, அது சட்ட விரோதமானதும் கூட. தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம், தொழில் பாதுகாப்பு, தொழிற்சங்க பிரதிநிதித்துவம் என்பவற்றுக்கான உரிமை உண்டு. இவை அனைத்தும் முறைசாரா முறையில் இல்லாமலாக்கப்படுகின்றன. பெருந்தோட்ட தொழிலாளர்கள் சுரண்டலுக்கு உள்ளாகுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த முறைசாரா முறைமைகளால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களை, குறிப்பாக ஏற்கனவே கடினமான நிதி சூழ்நிலையில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை அளித்து, கடின உழைப்புக்கு ஈடாக மிகவும் குறைவான பாதுகாப்புகளை வழங்குவதன் மூலம் அவர்கள் சுரண்டப்படுகின்றனர். இந்த விடயங்களின் ஊடாக முறைசார் முறைமைகளுக்கு மாறுவதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் உறுதிப்படுத்தும் ‘செக்ரோல்’ முறைமை போன்ற முறைசார் தொழிலாளர் முறைமைக்கு தோட்டத்துறை மாறுவது இன்றியமையாததாகும். தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து அறிந்திராத மக்களாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் உள்ளனர். தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு உள்ளிட்ட தொழில் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இன்றளவும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. மறுபுறம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்வது தோட்ட கம்பனிகளின் முக்கிய பொறுப்பாக உள்ளது. பொறுப்பை மறந்து இலாப நோக்குடன் மாத்திரம் செயற்படும் கம்பனிகளின் செயற்பாட்டை தடுக்கும் கடமை அரசுக்கும் உண்டு. • • •

## இலங்கையில் ... தொடர்ச்சி ...

ஆகியவை வலியுறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், தமிழ் ஊடகவியலாளர்களை இலக்காக்கும் விதமாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) பயன்படுத்தப்படுவது மிகவும் கவலையை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகங்கள் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பாக அறிக்கையிடும் ஊடகவியலாளர்களை தண்டிக்கவும், அவர்களின் தொழில்முறைப் பணிகளைத் தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக, 8 சர்வதேச மனித உரிமை மற்றும் ஊடக உரிமை அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா.உயர்ஸ்தானி ... தொடர்ச்சி ...

பங்கேற்பதையும், சர்வதேச தரத்தினையும் இலங்கையில் தங்கியிருக்கும்போதே வலியுறுத்தியிருந்தமை அமைகிறது.

ஆனால் துரதிஷ்டவசமாக செம்மணி மனிதப்புதைகுழி குறித்த விசாரணைகளைசுயாதீன தடயவியல் நிபுணர்கள் மூலம் முன்னெடுக்க வேண்டும் என்ற தனது பரிந்துரையை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இது பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைப் புறக்கணிப்பதாக மட்டுமன்றி ஆகக்குறைந்த நம்பிக்கையையும் இழக்கச் செய்திருக்கின்றது.

போரின் வடுக்களுடன் 16 ஆண்டுகளாக நீதியைக் கோரிப் போராடிவரும் மக்களுக்கு, இந்த அறிக்கை நம்பிக்கையளிப்பதற்குப் பதிலாக, ஒட்டுமொத்தமாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மீதான ஏமாற்றத்தையே வழங்கியுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்தை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதும், நடைமுறைக்கு ஒவ்வாதவொரு பாதிக்கப்பட்ட மக்களை சமாளிப்பதற்கான பரிந்துரையாகவே உள்ளது.

பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பதற்காவே ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடாத இலங்கை அரசாங்கம், தானாக முன்வந்து அதனை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இலங்கை தொடர்பாக ஐ.நா.வின் இந்த அறிக்கை, உள்நாட்டுப் பொறிமுறைகளை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவதாகவே அமைந்துள்ளது.

2015இல் நல்லாட்சி அரசாங்கமும் ஜெனிவா தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது. வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணைக்குழுக்களை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறையை அமைப்பதாக உறுதியளித்தது.

ஆனால், அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. குறித்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக ஓரங்குலம் கூட முன்னோக்கிய நகர்வு செய்யப்படவில்லை.

அவ்வாறான நிலையில் தற்போதைய புதிய அரசாங்கத்திற்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையானது, கடந்த காலத்தையொத்தவொரு வாய்ப்பை வழங்குவது, பொறுப்புக்கூறலை மேலும் தாமதப்படுத்துவதற்கும், நீர்த்துப்போகச் செய்வதற்கும் வழிவகுக்கும்.

பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் சர்வதேசப் பொறிமுறை ஒன்றே தங்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை ஐ.நா. கவனத்தில் கொள்ளாமல், மீண்டும் ஒரு உள்நாட்டுப் பொறிமுறையை திணிப்பது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் மீதான ஒட்டுமொத்த நம்பிக்கை இழப்புக்கு வழிவகுப்பதாக உள்ளது.

மேலும், ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகம் கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 34,000 தரவுகளையும், ஆதாரங்களையும் திரட்டியுள்ளது. இந்த ஆவணங்கள் மற்றும் சான்றுகள், இலங்கையில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள சாட்சியாளர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் மிக முக்கியமானவை.

ஆனால், இந்த ஆவணங்களை உள்நாட்டுப் பொறிமுறைக்குள் கையளிப்பது குறித்து அறிக்கை தெளிவான வழிமுறைகளைக் குறிப்பிடவில்லை. உள்நாட்டுப் பொறிமுறைகள் நிறுவப்படும்போது, இந்த ஆவணங்கள் அழிக்கப்படவோ அல்லது சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படவோ வாய்ப்புகள் அதிகமாகவே உண்டென ஐ.நா.வே சுட்டிக்காட்டியிருக்கிறது.

எனவே, பொறுப்புக்கூறலில் உண்மையான ஈடுபாடு இல்லாத அரசாங்கத்திடம் இந்த ஆதாரங்களைஒப்படைப்பது பெரும்ஆபத்தாகவே அமையும். அதுமட்டுமன்றி, ஏற்கனவே இனப்படுகொலையை அரங்கேற்றிய அரச கட்டமைப்புக்கள் தம்மைப் பாதுகாப்பதற்காக சாட்சியங்களையும் அழித்து ஒட்டுமொத்த இன வழிப்பைச் செய்துவிடும்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை, புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, அதற்கு ஒரு 'வரலாற்று வாய்ப்பை' வழங்குவது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிக்குரியதாக இருந் தாலும் அது பாதிக்கப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் நீண்டகால எதிர்பார்ப்புக்களையும் புறக்கணிப்பதாக உள்ளது.

பொறுப்புக்கூறலில் அரசாங்கம் காட்டி வரும் பிற்போக்குத்தனம், கடந்தகால வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை, மற்றும் உள்நாட்டுப் பொறிமுறையை திணிக்கும் முயற்சி ஆகியவை பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மேலும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

உண்மையான நீதியும், நிலையான சமாதானமும் அடைவதற்கு, அரசாங்கம் உண்மையான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதுடன், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையும் பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்கு செவிசாய்த்து, சர்வதேசப் பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும்.

ஆனால், ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை விஜயத்தின் பின்னர் கூட அவ்விதமான விடயங்களை அவரது அறிக்கை உணர்த்தியிருக்காமையானது, அரசாங்கங்கள் சார்ந்த போக்கையே வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த நிலைமையானது, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் மீது வெறுமனே இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த உலகத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கை இழப்பிற்கு வழிகோலியுள்ளது.

• • •

## உதவிப்பொருட் . . தொடர்ச்சி ...

குழுக்கள் வியாழக்கிழமை வெளியிட்ட ஒரு கூட்டு அறிக்கையில் தெரிவித்தன.

காசாவிற்குள் செல்லும் மனிதாபிமான உதவிகளுக்குத் தடைகள் இல்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளபோதும், கடந்த மார்ச் மாதம் 2 ஆம் நாளில் இருந்து அனைத்துலக அரசு சார்பற்ற நிறுவனங்களால் ஒரு லாரி உணவுப் பொருட்களைக் கூட அனுப்ப முடியவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வளர்ந்து வரும் பொருட்களின் தேக்கத்தை அகற்றுவதற்குப் பதிலாக, இஸ்ரேலிய அதிகாரிகள் டஜன் கணக்கான அரசு சாரா நிறுவனங்களின் உயிர்காக்கும் பொருட்களைக் கொண்டு வருவதற்கான கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர். இந்த அமைப்புகளுக்கு 'உதவி வழங்க அதிகாரம் இல்லை' என்று காரணம் காட்டியுள்ளனர். எல்லைகள் இல்லாத மருத்துவர்கள் (MSF) மற்றும் ஆக்ஸ்பாம் ஆகியவை இதில் அடங்கும்.

பல தசாப்தங்களாக காசாவில் பணியாற்றி வரும் நிவாரண அமைப்புகளிடம், புதிய "பதிவு விதிகள்" காரணமாக உதவி வழங்க "அங்கீகாரம்" இல்லை என்று இஸ்ரேல் கூறியுள்ளது. இதில் "பாதுகாப்பு" சோதனையும் அடங்கும். இதன் விளைவாக காசாவில் உள்ள மருத்துவமனைகள் இப்போது அடிப்படைப் பொருட்கள் இல்லாமல் உள்ளன. மேலும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் "இறந்து வருகின்றனர்".

"இராணுவமயமாக்கப்பட்ட உணவு விநியோகத் திட்டம் பட்டினியையும், துன்பத்தையும் ஆயுதமாக்கியுள்ளது. GHF தளங்களில் விநியோகம் தீவிர அளவிலான வன்முறை மற்றும் கொலைகளுக்கு வழிவகுத்துள்ளது. முதன்மையாக இளம் பாலஸ்தீனிய ஆண்கள், ஆனால் உணவு பெறும் நம்பிக்கையில் தளங்களுக்குச் சென்ற பெண்கள் மற்றும் குழந்தைகளும் கூட," என்று காசாவில் உள்ள MSF இன் அவசர ஒருங்கிணைப்பாளர் ஐடர் ஜபல்கோகியாஸ்கோவா கூறினார்.

மே மாதத்திலிருந்து GHF விநியோக தளங்களைச் சுற்றி உதவிப் பொருட்களை அணுக முயன்ற குறைந்தது 859 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அறிக்கையில் கையெழுத்திட்ட 100க்கும் மேற்பட்ட நிவாரண அமைப்புகள், இஸ்ரேல் அதன் "உதவி ஆயுதமாக்குதலை" நிறுத்தவும், இஸ்ரேல் அதன் "அதிகாரத்துவத் தடையை" முடிவுக்குக் கொண்டு வரவும், காசாவிற்கு உயிர்காக்கும் மனிதாபிமான உதவிகளை நிபந்தனையின்றி வழங்கவும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளன.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

## இரகசியத்தன்மை... தொடர்ச்சி ...

கூட்டாட்சி முறைமையைக் கொண்டுள்ளது. அங்கு ஒவ்வொரு மாகாணமும் தமது சொந்த சட்டங்களையும், நிர்வாகத்தையும் கொண்டுள்ளன. அங்கு ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் இத்தாலிய மொழி பேசும் சமூகங்கள் அமைதியான முறையில் ஒன்றாக வாழ்வதற்கு உதவியுள்ளது.

இந்த உதாரணங்கள் மூலம், அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது வெறும் நிர்வாக கட்டமைப்பை மாற்றுவது மட்டுமல்ல, அது நாட்டின் அனைத்து சமூகங்களின் உரிமைகளையும், அபிலாஷைகளையும் அங்கீகரித்து, அவற்றைப் பாதுகாப்பது என்பதற்கு உதாரணமாக உள்ளது.

தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கைகளை கவனத்தில் கொள்ளாமல், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமானால், அது மீண்டுமொருமுறை அரசியல் ஸ்திரமின்மைக்கும், சமூகப் பிரிவினைக்கும் வழிவகுக்கும். அது அநுர அரசாங்கம் செய்யும் வரலாற்றுத் தவறாகவே அமையும்.

நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவின் கூற்றுக்கள், அரசாங்கத்தின் நோக்கங்கள் குறித்து பல கேள்விகளை எழுப்புகின்றன. ‘எதிர்க்கட்சிகளின் அரசியல் பேசுபொருளுக்காக அரசியலமைப்புப் பணிகளை முன்னெடுக்க முடியாது’ என்று அவர் கூறுகிறார். ஆனால், அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட முடியாதவொரு விடயம்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அநுர அரசாங்கம் பெற்றுக் கொண்டாலும், அரசியலமைப்பை ஜனநாயக ரீதியில் நிறைவேற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் அவசியம்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான கோரிக்கையை நிராகரிப்பது, அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இல்லை என்பதையும், இரகசியமான முறையில் தனது நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற முற்படுகிறது என்பதையும் காட்டுகிறது.

‘மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவோம்’ என்று அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். ஆனால், ‘மக்களின் அபிலாஷைகள்’ என்பது யார்? இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களையும், குறிப்பாக நீண்டகாலமாக அரசியல் உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் சமூகங்களின் அபிலாஷைகளையும் இது உள்ளடக்கியுள்ளதா? அல்லது பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளை மட்டும் உள்ளடக்கியுள்ளதா? இந்த விடயங்களில் தெளிவின்மை காணப்படுகிறது.

இந்த இரகசியமான அணுகுமுறை, தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக நாட்டின் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான ஒரு நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் கொண்டிருக்கலாம் என்ற அச்சத்தை வெகுவாகத் தோற்றுவிக்கிறது.

இந்த நிலையில் தமிழினம் இந்த விடயத்தினை தவிர்க்க முடியாது கையாள வேண்டியுள்ளது. முதலில் புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை திரட்டி அரசாங்கத்துடன் உரையாடல்களை ஆரம்பிப்பதற்காக நகர வேண்டியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அடிப்படையானது, அதிகாரப் பகிர்வு மறுக்கப்பட்டமையே என்பதை சர்வதேச சமூகத்திற்கும், உள்ளூர் மக்களுக்கும் மீண்டும் எடுத்துரைக்க வேண்டும். சமஷ்டி முறைமை எவ்வாறு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும், தேசிய அடையாளத்தையும் பாதுகாக்கும் என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும் என்ற வரலாற்றுத் தர்க்கத்தை சுட்டிக்காண்பிக்க வேண்டியுள்ளது.

சமஷ்டி முறைமை ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்காது, மாறாக, பல்வேறு சமூகங்களை உள்ளடக்கி, தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் கருவி என்பதை கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளின் உதாரணங்களைக் கொண்டு நிரூபிக்கப்பதற்கான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்த வேண்டும்.

தமிழினத்தின் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமித்த குரலில் பேசக்கூடிய ஒரு பலம் வாய்ந்த கூட்டமைப்பை உருவாக்குவது மிக அவசியம். தமிழ்த் தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தின் பிரதிநிதிகள் அனைவரும் பொதுவான நிலைப்பாட்டை எடுத்து, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோரிக்கைகள் குறித்து அனைத்துத் தரப்பினருக்கும் இடையே ஒருமித்த கருத்து இருக்க வேண்டும். இது அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது, பலவீனமான விடயங்கள் புதிய அரசியலமைப்புக்குள் உள்வாங்கப்படுதலை தடுக்கும்.

புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன், சர்வதேச நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் அமைப்புகளின் ஆதரவைத் திரட்டி, அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் வெளிப்படைத்தன்மையையும், தமிழ் மக்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்த சர்வதேச அழுத்தங்களை உருவாக்க வேண்டும்.

கடந்தகாலங்களில் நடந்த தவறுகளை மீளவும் செய்யாமல் கவனமாகச் செயற்பட வேண்டும் என்பதோடு கடந்த காலங்களில் தனிப்பட்ட தலைவர்கள் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் தோல்வியடைந்தன. எனவே, முழு தமிழினத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கூட்டமைப்பின் ஊடாக மட்டுமே எந்தவொரு உடன்பாடும் செய்யப்பட வேண்டும்.

வெறுமனே சமஷ்டிக் கோரிக்கையை முன்வைக்காமல், அதிகாரப் பகிர்வுக்கான திட்டவட்டமான நடைமுறையில் சாத்தியப்படக்கூடியவாறான புதிய வரைவை உருவாக்கி அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். அது, நிதி அதிகாரம், காணி அதிகாரம், சட்டம் ஒழுங்கு போன்ற விடயங்களில் தமிழினத்தின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்தும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஒட்டுமொத்தமாக புதிய அரசியலமைப்புச் செயற்பாடுகளைத் தமிழினம் கையாள்வது என்பது, கடந்தகால அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டு, ஒற்றுமையுடனும், தந்திரோபாயத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், சர்வதேச ஆதரவுடனும் செயற்படுவதில் தான் தங்கியுள்ளது.

• • •

## தமிழீழம் கேட்டு . .. தொடர்ச்சி ...

படுத்தியுள்ளது.

- மக்களின் வாழ்விலும், காற்றாலைகளின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட், தோரியம் போன்ற கனிம வளங்கள், இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவத் தேவைகளுக்காக உலக நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. இதில் முதலீடு செய்வது பெரும் லாபம் தரும் என்பதால், பன்னாட்டு நிறுவனங்கள் முண்டியடிக்கின்றன.

எனவே, மன்னாரில் நடைபெற இருக்கும் இந்த அகழ்வாராய்ச்சி, மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்துவிடும் அளவிற்கு ஆபத்தானது. இந்தக் காற்றாலை மற்றும் கனிம அகழ்வு, நாட்டின் தேவைக்கானதன்றி, பன்னாட்டுக் கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

இத்தனை காரணங்களும் உண்மையானவை. இதை உணராமல், எங்கள் நிலத்தின் வளங்களை அழிக்கவும், எதிர்காலத்தில் மன்னார் தீவின் இயற்கை எழிலைச் சூறையாடவும் இந்த நாசகாரக் காற்றாலைத் திட்டம் வழிவகுக்கும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

மன்னாரில் ஆரம்பித்த போராட்டம், வவுனியாவில் மனிதச் சங்கிலிப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்கள், அரசியல்வாதிகளுக்கு அப்பால், மதத் தலைவர்களும் இதைத் தடுக்கப் போராடும் நிலையைக் காண முடிகிறது.

“தமிழீழம் கேட்டு அகிம்சையாகவும், ஆயுதமாகவும் போராடி அதைப் பெறவில்லை. இப்போது, தாயக மண்ணில் நடக்கும் அபகரிப்பு, வளங்களை அழிக்கும் நடவடிக்கை, திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டிய போராட்டங்கள் என, தொடர்கதையாகவே இப்போது தினமும் மாறிவிட்டது.”

தனிமனித இறப்பு: கடந்த வாரம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால குளத்தில் இராணுவம் கொலை செய்ததாகக் கூறி, எதிர்வரும் 18ம் தேதி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் வடகிழக்கு சார்ந்து முன்னெடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, எதற்கும் ஏதோ ஒரு கவன ஈர்ப்புப் போராட்டமே வாழ்க்கையாக மாறியுள்ளது. வடகிழக்கில் தமிழர்கள் போராடியே சகல விடயங்களுக்கும் தீர்வைப் பெற வேண்டும் என்ற நிலைமையே உள்ளதே தவிர, ஆட்சியாளர்களுடன் பேசி எதையும் தீர்க்க முடியாத நிலை, கடந்த 16 வருடங்களாகத் தொடர்வதையே, தற்போதைய மன்னார் காற்றாலையைத் தடுக்கும் போராட்டமும் வெளிப்படுத்தியுள்ளது.

அதற்கு நல்ல உதாரணம்: போராடியதால் தான் தற்போது மன்னார் காற்றாலை அமைக்கும் பணி ஒருமாதம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை. • • •

## ட்ரம்பின் நடவடி . .. தொடர்ச்சி ...

கொண்டிருக்கவில்லை என்பதால், அவர்கள் கொள்முதல் செய்வதில் இருந்து பின்வாங்குகின்றனர் என ஜார்ஜியா மாநிலத்தின் ராபின்சன் வர்த்தகக் கல்லூரியின் விநியோகச் சங்கிலி மேலாண்மை உதவிப் பேராசிரியர் ஜினோ கோலாரா அல் ஜசீராவிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபரின் வரிக் கொள்கைகள் மீதான ஒழுங்கற்ற அணுகுமுறை, சிலவற்றை நடைமுறைப்படுத்தி பின்னர் அவற்றை நீக்குவது போன்ற நடவடிக்கைகள் வர்த்தகத் திட்டமிடலில் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. கடந்த ஏப்ரல் மாதம், ஸ்டெல்லாண்டிஸ், போர்ட் மற்றும் வோல்வோ போன்ற கார் நிறுவனங்கள் இந்த நிச்சயமற்ற தன்மை காரணமாக தங்களது நிதித் திட்டமிடலை நிறுத்தி வைத்திருந்தன.

இரண்டாவது காலாண்டில் வரிகள் காரணமாக 1.2 பில்லியன் டாலர்களை இழந்ததாக வோல்வோ நிறுவனம் கடந்த மாதம் தெரிவித்தது. போர்ட் நிறுவனமும் கடந்த காலாண்டில் 800 மில்லியன் டாலர்களை இழந்துள்ளது. எனவே இந்த ஆண்டு அது 3 பில்லியன் டாலர்களை இழக்கலாம் என தெரிவித்துள்ளது. ஜி.எம். நிறுவனம் தனது இழப்பு 5 பில்லியன் டாலர்கள் என தெரிவித்துள்ளது. ஜப்பானின் டொயோட்டா நிறுவனம் 9.5 பில்லியன் டாலர்களை இழக்கலாம் என தெரிவித்துள்ளது.

மே மாதத்தில், ஃபோர்டு நிறுவனம் மெக்சிகோவில் தயாரிக்கப்படும் அதன் சில கார்களின் விலையை உயர்த்த வேண்டியிருக்கும் என்று அறிவித்தது. இதில் மஸ்டாங் மேக்-ஈ எலக்ட்ரிக் எஸ்யூவி, மேவரிக் பிக்-அப் டிரக் மற்றும் ப்ரான்கோ ஸ்போர்ட் போன்றவை அடங்கும். சில சந்தர்ப்பங்களில் $2,000 வரை விலை உயர்த்தப்படலாம் என ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பயன்படுத்தப்பட்ட கார்களின் விற்பனை கடந்த ஆண்டை விட 2.3 சதவீதம் அதிகரித்துள்ளது என எட்மண்ட்ஸின் ஆட்டோமோட்டிவ் துறை நுண்ணறிவு தளமான கோஸ்டு கார் இன்டெக்ஸ் அறிக்கை தெரிவித்துள்ளது.

# தாயகமும் வாழ்வும்

வீரமுனைப் படுகொலை நினைவேந்தல்



செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்

